24.07.2015

# தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அணு ஆராய்ச்சி மைய நிலக்கடலை திண்டுக்கல்லில் அறிமுகம்



காந்திகிராமம் : வறட்சியை தாங்கி வளரும் புதிய ரக நிலக்கடலையை திண்டுக்கல் காந்திகிராம வேளாண் அறிவியல் மையம் அறிமுகப்படுத்தி உள்ளது.தமிழகத்தில் 70 சதவீதம் நிலக்கடலை மானாவாரியாக பயிரிடப்படுகிறது. மூன்று ஆண்டுகளாக எதிர்பார்த்த மழை பெய்யாததால் மானாவாரி சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. மீண்டும் சாகுபடி பரப்பு, மகசூலை அதிகரிக்க காந்திகிராம வேளாண் அறிவியல் மையம் டி.ஜி.,37 ஏ என்ற புதிய ரக நிலக்கடலையை அறிமுகப்படுத்தியுள்ளது. மும்பை பாபா அணு ஆராய்ச்சி மையத்தால் கண்டறியப்பட்ட இந்த ரகம் நீண்ட நாட்கள் வறட்சியை தாங்கி வளரும். நோய் தாக்குதல் இருக்காது. மற்ற ரகங்களை விட 20 சதவீதம் கூடுதல் மகசூல் இருக்கும்.அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் கூறியதாவது: நீர் பற்றாக்குறையால் பணப்பயிராக இருந்த நிலக்கடலை நஷ்டபயிராக மாறியுள்ளது. புதிய ரகத்திற்கு நீர் தேவை

குறைவு. மற்ற ரகங்களை போல், புதிய ரகத்தையும் 105 நாட்களில் அறுவடை செய்யலாம். நிலக்கடலை திரட்சியாக இருக்கும். எண்ணெய் தன்மை அதிகமாக இருக்கும். இந்த ரக விதைகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க உள்ளோம், என்றார்.

## வளைகுடா நாடுகளுக்கு செல்லும் 'களவாய் மீன்'ஒரு மீன் விலை ரூ. 5 ஆயிரம்



ராமேஸ்வரம்: ராமேஸ்வரம் அருகே பாம்பன் மீனவர் வலையில் சிக்கிய ருசி மிகுந்த களவாய் மீன், வளைகுடா நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. அதில் ஒரு மீன் ரூ. 5 ஆயிரம் வரை விலை போனது.பாம்பனில் இருந்து ஜூலை 23ல், தெற்கு ஆழ்கடலில் 200 நாட்டுப்படகுகளில் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் நேற்று காலை கரை திரும்பினர். இதில் பாம்பன் 'லைட் ஹவுஸ்' பகுதியைச் சேர்ந்த டெரின் என்பவரது படகில், 3 அடி நீளத்தில் 18 கிலோ எடையுள்ள பெரிய 'களவாய்' மீன் சிக்கியது. இந்த மீனை, ஒரு கிலோ 270 ரூபாய் வீதம், ரூ.4860 க்கு பாம்பன் மீன் வியாபாரி ஒருவர் விலைக்கு வாங்கினார். இதுகுறித்து பாம்பன் மீன்

வியாபாரி ராஜா கூறியதாவது:18 கிலோ எடையில்'களவாய்' மீன் சிக்கி இருப்பது, நாட்டுப்படகு மீனவர்களுக்கு 'ஜாக்பாட்' தான். ருசிமிகுந்த இந்த மீனை பதப்படுத்தி, துாத்துக்குடிஏற்றுமதி நிறுவனத்திற்கு அனுப்பி, அங்கிருந்து கப்பலில் துபாய், குவைத், சவுதி உள்ளிட்ட வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்," என்றார்.

## தமிழக அரசு உதவினால் ஜவுளித்துறையில் புதிய முதலீடுகள் செய்ய தயார்! அரசிடம் கோவை, திருப்பூர் தொழில்துறையினர் 'பளிச்'

கோவை:அரசு உதவினால் தமிழகத்தில் கோடிக்கணக்கில் புதிய முதலீடுகள் செய்ய தயாராக உள்ளதாக, கோவை மற்றும் திருப்பூர் தொழில்துறையினர் அரசுக்கு தெரிவித்துள்ளனர். தமிழக அரசு சார்பில், சென்னையில் செப்., 9,10 ஆகிய தேதிகளில், சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு நடக்கிறது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம், சென்னையில் நேற்று முன்தினம் நடந்தது. நான்கு அமைச்சர்கள் பங்கேற்ற இக்கூட்டத்தில், கோவை மற்றும் திருப்பூரை சேர்ந்த தொழில்துறையினர் பங்கேற்று, தங்கள் கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

**இது குறித்து அவர்கள் கூறியதாவது: தென்னிந்திய மில்கள் சங்க(சைமா) பொதுச் செயலாளர் செல்வராஜ்:**நாடா இல்லா தறி, நவீன சாய ஆலை கேந்திரங்கள், சாயக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு தமிழக அரசு அதிக சலுகைகளை வழங்க வேண்டும். கோடிக்கணக்கில் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி நிலுவை, ஏற்றுமதி சலுகைகள் வழங்காதது உள்ளிட்ட காரணங்களால், இரண்டாண்டுகளாக தொழில் சற்று மந்தமான நிலையில் உள்ளது.இப்பிரச்னைகளுக்கு மத்திய அரசு விரைவில், தீர்வு காணும் என்று நம்புகிறோம். நாடா இல்லா தறி இயந்திரங்கள் உற்பத்தியை அதிகரிக்க, அரசு சலுகை வழங்க வேண்டும். சலுகைகள்

அதிகரித்தால், வரும் மூன்றாண்டுகளில், 30 முதல் 50 ஆயிரம் கோடி ரூபாய்க்கு, புதிய முதலீடுகள் செய்ய வாய்ப்பு உள்ளது.திருப்பூர், ஸ்ரீபுரம் அறக்கட்டளை நிர்வாகி ஆடிட்டர் ராமநாதன்: ஆயத்த ஆடைத்துறையில் ஆண்டு வர்த்தகம், 25 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்க, 5 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடும், 2 லட்சம் தொழிலாளர்களும் தேவை. திருப்பூரில் ஆயத்த ஆடை வணிகத்தை, ஆண்டுக்கு ஒரு லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்த, தேவையான விரிவான திட்ட அறிக்கையை, சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டில் சமர்ப்பிக்க உள்ளோம். நிட்டிங் துறையில், 50 சதவீத உபகரணங்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப் படுகின்றன. உள்நாட்டில் உற்பத்தியை ஊக்குவிக்க, அரசு உதவினால் உற்பத்தி செலவு கணிசமாக குறையும். அரசின் பொருளாதாரமும் மேம்படும்.

**இந்திய டெக்ஸ்டைல் உற்பத்தி தொழில்துறை கூட்டமைப்பு(ஐ.டி.எப்) செயலாளர் பிரபு தாமோதரன்:** ஜவுளி தொழில்துறைக்கு உதவ அரசு முன்வந்தால், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், கோடிக்கணக்கில் புதிய முதலீடுகளை செய்ய, மில் நிர்வாகத்தினர் தயாராக உள்ளனர். மத்திய அரசின் தொழில்நுட்ப மேம்பாட்டு நிதி திட்டத்தை(டப்) போல, ஸ்பின்னிங் மில்களுக்கென பிரத்யேக நிதி திட்டத்தை, தமிழக அரசு அறிவிக்க வேண்டும்.இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## குற்றாலத்தில் தாமதமான 'சீசன்'



திருநெல்வேலி: குற்றாலத்தில் 'சீசன்' மீண்டும் களைகட்டி உள்ளது. சுற்றுலா பயணிகள் கூட்டமும் அதிகரித்துள்ளது.நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் வழக்கமாக ஜூனில் 'சீசன்' துவங்கி,. மூன்று மாதங்கள் நீடிக்கும். இந்த ஆண்டு பருவகால மாற்றத்தால் மேயில் மழை கொட்டியது. ஜூனில் தென்மேற்கு பருவ மழை பெய்யவில்லை. இதனால் 'சீசனும்' மந்தமாகவே இருந்தது. குற்றாலம், தென்காசியில் சுற்றுலா பயணிகளால் வியாபாரமும் எதிர்பார்த்த அளவு இல்லை.இந்நிலையில் கடந்த சில தினங்களாக 'சீசன்' மீண்டும் களைக்கட்ட துவங்கி உள்ளது. நேற்றும், லேசான சாரல் பெய்தது. அனைத்து அருவிகளிலும் குளிக்கும் அளவுக்கு தண்ணீர் கொட்டுகிறது. அரசு சார்பில் 'சாரல் விழா' வரும் வாரத்தில் துவங்கும்.

## கொடைக்கானல் 'மேரிஜம் ஏரி' நீர்: விவசாயிகள் எதிர்பார்ப்பு

திண்டுக்கல் :கொடைக்கானலில் மன்னவனுார் ஊராட்சியிலுள்ள 'மேரிஜம் ஏரி'யின் நீரை குடிநீருக்கும், பாசனத்திற்கு தரவேண்டும், என

வனத்துறையிடம்விவசாயிகள்வலியுறுத்தியுள்ளனர்.கொடைக்கானலிலுள்ள மன்னவனுார் ஊராட்சியில், 'எழும்பள்ளம் குளம்' உள்ளது. அருகே புல்வெளியுடன், மூன்று கி.மீ., பரப்பில், 30 ஆடி ஆழத்துடன் அழகுற அமைந்துள்ளது. மன்னவனுார் விவசாயிகள் 1952 முதல் தடுப்புச்சுவர் அமைத்து பாசனத்திற்கும், குடிநீருக்கும் பயன்படுத்தி வந்தனர். கொடியேந்தனார் பாசனம் மூலம், குளத்தின் நீரில் 700 ஏக்கரில் கேரட், முட்டைகோஸ், பூண்டு, பட்டாணி, உருளைக்கிழங்கு பயிர்களுக்கு பாசனவசதி வழங்கப்பட்டது.மீன்கள் வளர்ப்பு: ஊர்மக்களிடம் வரிப்பணம் வசூலித்து குளத்தை 2000ம் ஆண்டு வரை பராமரித்தனர். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு வனத்துறையினர் குளத்தின் கரையிலுள்ள 1,500 ஏக்கர் புல்வெளிப் பகுதியை 'சூழல் சுற்றுலா' மையமாக அறிவித்து,'மேரிஜம் ஏரி' என பெயர் மாற்றம் செய்தது. அதில் பரிசல் சவாரி செய்யவும் ஏற்பாடுகளை செய்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக விவசாயம், குடிநீருக்கு தண்ணீர் வழங்குவதை நிறுத்தி விட்டனர். வனத்துறை ஒப்புதலுடனே ஏதோ பெயருக்கு வழங்குின்றனர். எனவே பாசனத்திற்கும், குடிநீருக்கும் நீரை வழங்க வனத்துறையினர் முன் வர வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர். விவசாயி விவேக் கூறியதாவது: இந்த ஏரி ஊருணி போன்று எப்போதும் தண்ணீர் பெருகிய வண்ணம் இருக்கும். இதில் படகு சவாரி விட்டுள்ளனர். எங்கள் வாழ்வாதாரமாக இருந்த ஏரியின் நீரை குடிநீர், பாசனத்திற்காக வழங்க வேண்டும், என்றார்.மாவட்ட வன அலுவலர் வெங்கடேஷ் கூறியதாவது: ஏரியும், அருகில் உள்ள புல்வெளியும் வனத்துறை பகுதியில் அமைந்துள்ளது. அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவே சூழல் சுற்றுலா மையம் துவக்கினோம். ஏரியில் பரிசல் சவாரி, போதிய தண்ணீர் இருக்கும்போது மட்டுமே

இயக்கப்படும். பாசனத்திற்கும், குடிநீருக்கும் தண்ணீர் வழங்க மாட்டோம் என கூற வில்லை. சூழல் சுற்றுலா மூலம் கிடைக்கும் வருவாயால் மன்னவனுார் மக்கள் மேம்பாடு அடைவர், என்றார்.

## இரண்டு ஆண்டுகளில் நிலத்தடி நீரில் உப்புத்தன்மை அதிகரிப்பு :சென்னையில் ஆர்.ஓ., கருவிகள் விற்பனை அமோகம்

சென்னை:சென்னையில் நிலத்தடி நீர்மட்டம் சரிவாலும், அதிகமான ஆழத்திற்கு ஆழ்துளை கிணறுகள் எடுக்கப்படுவதாலும், கடந்த இரண்டு ஆண்டுகளில், நிலத்தடி நீரில், உப்புத்தன்மை கணிசமாக உயர்ந்துள்ளது. இதனால் வீடுகளில் ஆர்.ஓ., கருவிகள் பொருத்துவது, அதிகரித்து வருகிறது.சர்வதேச அளவில், நீர் மூலம் பரவும் நோய்களால் ஏற்படும் உயிரிழப்பு,

பயங்கரவாதத்தின் மூலமான உயிரிழப்பை விட அதிகம் என்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.தண்ணீர் பயன்பாட்டில், சுகாதாரம் மிகவும் முக்கியமாக கருதப்படும் நிலையில், மழைநீரை முறையாக சேமிக்காததால், சென்னையில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. தண்ணீர் தேவைக்காக, மக்கள் போட்டிபோட்டு, அதிகமான ஆழத்திற்கு ஆழ்துளை கிணறுகளை அமைத்து வருகின்றனர்.இதன் காரணமாக, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், கடந்த இரண்டு ஆண்டுகளில் இருந்ததை காட்டிலும், தற்போது நீரில் உப்புத்தன்மை கணிசமாக அதிகரித்துள்ளது. பல இடங்களில், மனிதர்கள் குடிக்கவோ, சமையலுக்கோ உகந்ததாக, இந்த நீர் இல்லை. உப்புத்தன்மையால், நீரை சுத்திகரித்து பயன்படுத்தும் நிலை அதிகரித்து வருகிறது. கிராமங்களிலும் ஆர்.ஓ.,முன்பெல்லாம், நிலத்தடி நீர் பிரச்னை உள்ள

பகுதிகளில் மட்டுமே, இதுபோன்று தண்ணீரை சுத்திகரித்து பயன்படுத்தும், ஆர்.ஓ., கருவிகளை மக்கள் பொருத்தி வந்தனர். தற்போது கிராமங்கள் உட்பட அனைத்து பகுதிகளிலும், நீரை சுத்திகரிப்பு செய்து பயன்படுத்தும் நிலை வந்துவிட்டது.சென்னையில் வில்லிவாக்கம், முகப்பேர், வேளச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன், 1,000 மி.கி.,க்கும் குறைவாக இருந்த உப்புத்தன்மை, தற்போது, 2,000 முதல் 4,000 மி.கி., வரை அதிகரித்துள்ளது. நகரின் அனைத்து பகுதிகளிலும், சராசரியாக நீரில் உப்புத்தன்மை, 1,000 மி.கி., என்ற அளவில் உள்ளது. புறநகர்களில் மோசம்புறநகர் பகுதிகளில், இது இன்னும் மோசமாக உள்ளது. ஏரிகள் நிறைந்த தென்சென்னை புறநகர் பகுதிகளான மேடவாக்கம், பள்ளிக்கரணை, தாம்பரம், பெருங்களத்துார், சேலையூர் ஆகிய பகுதிகளில், கிணற்று தண்ணீரிலேயே 1000 மி.கி.,க்கும் அதிகமாக உப்புத்தன்மை உள்ளது.குரோம்பேட்டை, பல்லாவரம் ஆகிய பகுதிகளில் 2000 மி.கி.,க்கும் அதிகமாக உப்புத்தன்மை கொண்டதாக, நிலத்தடி நீர் மாறிவிட்டது.இதனால் குடியிருப்புகளில், நீரை சுத்திகரிக்கும் ஆர்.ஓ., கருவிகள் பொருத்துவது, கடந்த ஆண்டை காட்டிலும் தற்போது கணிசமாக அதிகரித்து உள்ளது.இதுகுறித்து ஆர்.ஓ., கருவிகள் பொருத்தும் நிறுவனத்தை சேர்ந்த ஒருவர் கூறியதாவது: நீரில் கால்சியம், மெக்னீசியம் உட்பட, 20 வகையான உப்புத்தன்மை கலந்திருக்கும். அதன் அளவை பொறுத்து தான், அந்த தண்ணீர் பயன்படுத்த ஏற்றதா, இல்லையா என்று முடிவு செய்யப்படுகிறது. பொதுவாக ஒரு லிட்டர் தண்ணீரில், 50 முதல் 150 மி.கி., அளவிற்கு உப்புத்தன்மை இருந்தால், அவற்றை சுத்திகரிக்காமல் குடிக்கலாம். அதே தண்ணீர் 300 மி.கி., வரை உப்புத்தன்மை இருந்தால், சுத்திகரிக்காமல் சமையலுக்கு பயன்படுத்தலாம்.ஆர்.ஓ., கருவியே தாங்காது

இந்த அளவை கடக்கும் போது, நிச்சயமாக சுத்திகரித்து தான் பயன்படுத்த வேண்டும். ஆர்.ஓ., கருவி அமைக்கும் போது, அந்த பகுதி நிலத்தடி நீரின் உப்புத்தன்மையை பொறுத்து 'மெமரான்' எனப்படும் நீரில் இருந்து உப்புத்தன்மையை பிரித்தெடுக்கும், வடிகட்டியை பொருத்துகிறோம்.அதேநேரம், 2,000 மி.கி., அளவிற்கு அதிகமாக உப்புத்தன்மை இருந்தால், ஆர்.ஓ., கருவி அமைப்பதே வீண் வேலை. இந்த அளவிற்கு உப்புத்தன்மை கொண்ட நீரை, சுத்திகரித்தால், வடிகட்டி, மூன்றே மாதங்களில், செயலிழந்துவிடும். இதனால் பராமரிப்பு செலவு அதிகமாகும்.கடந்த இரண்டு ஆண்டுகளில், சென்னையில் 1,000 மி.கி.,க்கும் அதிக மாக நிலத்தடி நீரில் உப்புத்தன்மை அதிகரித்துள்ளதால், ஆர்.ஓ., கருவிகளின் விற்பனை அமோகமாக உள்ளது.ஆனால், தொடர்ந்து இந்த உப்புத்தன்மைஅதிகரித்தால், ஆர்.ஓ., கருவியே கூடசெயலிழக்கும் நிலை ஏற்படும்.இவ்வாறு அவர் கூறினார்.ரூ.7,000 முதல் ரூ.30 ஆயிரம் வரை! குடியிருப்புகளில் ஆர்.ஓ., கருவி, நிலத்தடி நீரின் தன்மைக்கு ஏற்ப அமைக்கப்படுகிறது. இந்த கருவிகள், 7,000 முதல் 30 ஆயிரம் ரூபாய் விலை வரை கிடைக்கின்றன. உப்புத்தன்மை 500 முதல் 600 மி.கி., அளவிற்கு இருந்தால், ஆரம்ப விலை கருவிகளை பொருத்தினாலே போதும். உப்புத்தன்மையின் அளவு ஆயிரத்தை கடக்கும் போது, அதிக திறன் கொண்ட வடிகட்டி உபயோகப்படுத்த வேண்டும். அதிகபட்சம் எட்டு மாதங்கள் முதல் ஓராண்டிற்குள், வடிகட்டியை மாற்றுவது அவசியம். சுத்திகரிக்கப்பட்ட நீர், உப்புத்தன்மையோடு வரும் போது, வடிகட்டி செயலிழந்துவிட்டதை உணரலாம். அப்போது வடிகட்டியை மாற்றுவது அவசியம். அதை மாற்ற 1,500 முதல் 2,500 ரூபாய் வரை செலவாகும்.மெட்ரோ குடிநீரை சுத்திகரிக்கலாமா?சென்னை குடிநீர் வாரியம் மூலம் வழங்கப்படும் குடிநீர், ஏற்கனவே சுத்திகரிக்கப்பட்டு,

குளோரின் கலந்து வினியோகிக்கப்படுகிறது. அதில், உப்புத்தன்மை இருக்காது. இதனால் அந்த குடிநீரை, வீட்டில் சுத்திகரிக்க வேண்டிய அவசியம் இல்லை; காய்ச்சி குடித்தாலே போதும். மேலும், வாரியம் வழங்கும் நீரில், நுண்ணுயிரிகளை அழிக்க, சுண்ணாம்பு, குளோரின் உள்ளிட்ட வேதிப்பொருட்கள் கலக்கப்படுவதால், வீடுகளில், அவற்றை ஆர்.ஓ., கருவி மூலம் சுத்திகரித்தால், வடிகட்டி செயலிழக்கும் என்று ஏஜென்டுகள் தெரிவிக்கின்றனர். சில பேரூராட்சி, நகராட்சிகளில் நிலத்தடி நீர், குடிநீராக வினியோகம் செய்யப்படுகிறது. இதுபோன்ற பகுதிகளில், ஆர்.ஓ., கருவி பொருத்தலாம்.கொளத்துார் மக்கள் கொதிப்பு! சென்னை கொளத்துாரில் உள்ள டீச்சர்ஸ் காலனியில், குடிநீர், கழிவு நீர் இணைப்பு இன்னும் வழங்கப்படவில்லை. பகுதிவாசிகள், நிலத்தடி நீரை ஆய்வுக்கு அனுப்பியதில், உப்புத்தன்மை 2,700 மி.கி., அளவுக்கு மேல் இருப்பதாக முடிவுகள் கிடைத்தன. அதனால் யாரும் நிலத்தடி நீரை பயன்படுத்தாமல், லாரி தண்ணீரை விலைக்கு வாங்கி பயன்படுத்துகின்றனர். இதனால் நான்கு வீடுகள் கொண்ட ஒரு அடுக்குமாடி குடியிருப்புக்கு, மாதம் ஒன்றுக்கு 15,000 ரூபாய் வரை செலவாகிறது என, அவர்கள் புலம்புகின்றனர். இந்த பகுதியில் குழாய் பதிக்கும் பணி முடிந்தும், குடிநீர், கழிவுநீர் இணைப்பு தரப்படாததால், கொதிப்பில் உள்ளனர்.

## பயிருக்கு இணையாக களைகள் விவசாயிகளுக்கு கூடுதல் செலவு

கும்மிடிப்பூண்டி:திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றாததால், பயிருக்கு இணையாக வளர்ந்துள்ள களைகளை பறிப்பதில், கூடுதல் செலவு ஏற்படுவதாக, விவசாயிகள் புலம்புகின்றனர்.கும்மிடிப்பூண்டி மற்றும் அதை சுற்றியுள்ள கிராம பகுதிகளில் தற்போது, சொர்ணவாரி நெற்பயிர் சாகுபடி நடைபெற்று வருகிறது. நெற்பயிர்களின் மகசூல்

பாதிக்காமல் இருக்க, களைகள் பறிப்பது அவசியம். திருந்திய நெல் சாகுபடி முறையில் போதிய இடைவெளி இருப்பதால், களை பறிக்கும் இயந்திரம் மூலம் எளிதாக களைகள் வேரோடு அகற்றப்படுவதுடன், கூலிக்கு ஆள் வைக்க தேவையில்லை. திருந்திய நெல் சாகுபடி முறையை, பல விவசாயிகள் பின்பற்றாமல் உள்ளனர். அதன் விளைவாக, நடவு நட்ட பின் நெருக்கமாக உள்ள பயிர்களுக்கு இடையே, வளரும் களைகளை கையால் மட்டுமே பறிக்க முடியும். அதுவும் வேறோடு அகற்ற முடியாத நிலையில், அடிக்கடி கூலிக்கு ஆள் வைத்து, களைகளை பறிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.இதனால் மகசூல் பாதிக்கப்படுவதுடன், களை பறிப்பதற்காக கணிசமான தொகை ஒதுக்க வேண்டி உள்ளது.இதுகுறித்து, குருவிஅகரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், "திருந்திய நெல் சாகுபடி முறையை பின்பற்றாமல் அலட்சியம் செய்ததால், இதுவரை மூன்று முறை களை பறித்துள்ளேன். களைகள் அனைத்தும் பயிருக்கு இணையாக வளர்ந்து உள்ளதால், கூடுதல் ஆட்களை நியமித்து களை பறிப்பதால், கூடுதல் செலவு ஏற்படுகிறது," என்றார்.

## காட்டுவனஞ்சூரில் குடற்புழு நீக்க முகாம்

சங்கராபுரம்:சங்கராபுரம் அடுத்த காட்டுவனஞ்சூரில் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க முகாம் நடந்தது.கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் காட்டு வனஞ்சூரில் சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது. சங்கராபுரம் கால்நடை மருத்துவர் டாக்டர் கார்த்திகேயன், ஆவின் மருத்துவர் டாக்டர் சிவா ஆகியோர் கலந்து கொண்டு, கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க மருந்து அளித்தனர். முகாமில் 175 கால்நடைகளுக்கு மருந்து அளிக்கப்பட்டது.

## ரூ.38 லட்சத்திற்கு பருத்தி வர்த்தகம்

நாமக்கல்:நாமக்கல், வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, நடந்த பருத்தி ஏலத்தில், 38 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.நாமக்கல் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, ஏராளமான விவசாயிகள், 2, 400 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.அதில், டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,399, குறைந்த பட்சம், 3,926 ரூபாய், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,299, குறைந்த பட்சம், 3,843 ரூபாய்க்கு ஏலம் போனது. அதேபோல், சுரபி ரகம் அதிக பட்சம், 6,650, குறைந்த பட்சம், 6,050 ரூபாய்க்கு ஏலம் போனது.

நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 2,400 மூட்டை பருத்தி, 38 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு ஆகிய பகுதிகளை சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

## ஒகேனக்கல்லில் நீர் வரத்து குறைவு:அருவிகளில் குளிக்க தடை நீக்கம்

ஒகேனக்கல்:ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து குறைந்துள்ளதால், நேற்று மதியம் முதல் அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்பட்டனர்.

கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பெய்த கன மழையால், கபினி மற்றும் ஹேமாவதி அணைகள் நிரம்பியது. இதனையடுத்து அணையின் பாதுகாப்பு கருதி, அணையில் இருந்து உபரி நீர் காவிரி ஆற்றில் திறந்துவிடப்பட்டது. திறந்துவிடப்பட்ட தண்ணீர், இரண்டு நாட்களுக்கு முன், தமிழக எல்லையான பிலிகுண்டுலுவை வந்தடைந்தது.

இதனால் ஒகேனக்கல்லில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. நேற்று முன்தினம் காலை ஒகேனக்கல்லில் வினாடிக்கு, 25,400 கன அடிநீர் வந்தததது. வெள்ளப்பெருக்கால் ஒகேனக்கல் அருவிகளை மூழ்கடித்தவாறு தண்ணீர் சென்றது. இதனால் அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில் கர்நாடகா மாநிலத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதியில் மழை குறைந்துள்ளதால் அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவும் குறைந்துள்ளது. நேற்று காலை முதல், ஒகேனக்கல்லில் நீர் வரத்து குறைய தொடங்கியது. நேற்று காலை, 8 மணி நிலவரப்படி வினாடிக்கு, 18,500 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பகல், 1 மணி நிலவரப்படி, வினாடிக்கு, 16 ஆயிரம் கன அடிநீர் மட்டுமே வந்து கொண்டிருந்தது. இதையடுத்து ஒகேனக்கல் அருவிகளில் குளிக்க விதிக்கப்பட்ட தடையை மாவட்ட நிர்வாகம் நீக்கியது.சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்து, அருவிகளில் ஆனந்த குளியல் போட்டனர்.சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி வழக்கமாக பரிசல் இயகப்படும் அத்திமரத்து கடவு பகுதியில் இருந்து பரிசல்களை இயக்கமால், சின்னாறு பகுதியில் இருந்து மட்டுமே பரிசல் இயக்கப்பட்டது.

மேட்டூர் அணை நீர்வரத்து சரிவு:கர்நாடகாவின் கபினி, கே.ஆர்.எஸ்., அணையில் கடந்த, 19ம் தேதி வினாடிக்கு, 29,000 கனஅடி நீர் மேட்டூர் அணைக்கு திறக்கப்பட்டது. இந்த நீர் வந்து சேர்ந்ததால், 19ம் தேதி வினாடிக்கு, 4,512 கனஅடியாக இருந்த, மேட்டூர் அணை நீர்வரத்து

நேற்று முன்தினம் வினாடிக்கு, 25,103 கனஅடியாக அதிகரித்தது. பின் கர்நாடகா அணைகளின் நீர்திறப்பு குறைந்ததால், மேட்டூர் அணை நீர்வரத்தும் சரிய துவங்கியது. நேற்று நீர்வரத்து வினாடிக்கு, 21,594 கனஅடியாக சரிந்தது. கூடுதல் நீர்வரத்தால் கடந்த, 19ம் தேதி, 86.330 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் நேற்று, 91.410 அடியாகவும், நீர் இருப்பு, 54.278 டி.எம்.சி.,யாகவும் அதிகரித்தது. நேற்று கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் வினாடிக்கு, 14,000 கனஅடி நீர் திறக்கப்பட்டதால், மேட்டூர் அணை நீர்வரத்து மேலும் சரியும்.

### கிருஷ்ணகிரியில் பரவலாக மழை

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை பல இடங்களில் பரவலாக மழை கொட்டி தீர்த்தது. இதில் குறிப்பாக கிருஷ்ணகிரி பகுதியில் கனமழை பெய்தது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று காலை, 8 மணி நிலவரப்படி பெய்த மழை அளவு வருமாறு:கிருஷ்ணகிரி, 35.2 மி.மீ., தளி, 10, நெடுங்கல், 8, தேன்கனிக்கோட்டை, 6.2, அஞ்செட்டி, 6, பெனுகொண்டாபுரம், 5.2, போச்சம்பள்ளி, 3.2, ஊத்தங்கரை, 2 மி.மீட்டர் என மொத்தம் மாவட்டம் முழுவதும், 75.80 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

### பருத்தி வரத்து அதிகரிப்பு:ஏலத்துக்காக காத்திருப்பு

அந்தியூர்:அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்துக்கு, அத்தாணி, ஆப்பக்கூடல், வெள்ளித்திருப்பூர், கோபி உட்பட பல்வேறு

பகுதிகளில் இருந்தும், விவசாயிகள் பருத்தி மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டு வருகின்றனர்.கடந்த ஆண்டு பெய்த மழையால், அந்தியூர் பகுதியில் ஏராளமான விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்துள்ளனர். கடந்த ஒரு மாதம் முன்பு, பருத்தி சீசன் துவங்கி, தற்போது ஏராளமான பருத்தி, விற்பனைக்கூடத்துக்கு வந்து கொண்டுள்ளது.வாரந்தோறும் திங்கட்கிழமை பருத்தி ஏலம் நடைபெறும். கடந்த வாரம், 10,000 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது.வரும், திங்கட்கிழமை (27ம் தேதி) நடக்கும் பருத்தி ஏலத்துக்கு ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் இடம் பிடிக்க, நேற்று முன்தினம் முதல் பருத்தி மூட்டைகளை, டெம்போ வாகனத்தில், விவசாயிகள் கொண்டு வந்தனர்.ஏராளமான விவசாயிகள், ஒரே சமயத்தில் மூட்டைகளை கொண்டு வந்ததால், விற்பனைக்கூட வளாகத்தில் வாகனத்தை நிறுத்த இடம் இல்லாமல், ஒரு மணி நேரத்துக்கும் மேல் ரோட்டில் வாகனங்களை நிறுத்தி வைத்து, விவசாயிகள் காத்திருந்தனர். உள்ளே சென்ற வாகனங்கள், பருத்தியை இறக்கிவிட்டு வெளியே சென்ற பின்னரே, சாலையில் நின்ற வாகனங்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டது.இந்த வாரம், அதிக அளவில் பருத்தி ஏலம் நடக்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்

நடைபெறுகிறது.இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை, மின் வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, மீன்வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண் விற்பனை, வணிகத் துறை, இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காணவுள்ளனர்.எனவே மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் இந்த கூட்டத்தில் பங்கேற்று பயன்பெற வேண்டும். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**பலத்த மழை: பொதுமக்கள் மகிழ்ச்சி**

திருவள்ளூர், அதன் சுற்றியுள்ள பகுதிகளில் புதன்கிழமை மாலை பலத்த மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

திருவள்ளூர், சுற்றியுள்ள பகுதிகளில் புதன்கிழமை காலை 9 மணி முதல் வெயில் கடுமையாக வாட்டியது. இதனால் சாலையோர குளிர்பானக் கடைகள், கரும்பு, சாத்துக்குடி சாறு கடைகளில் மக்களின் கூட்டம் அலைமோதியது. இந்த நிலையில் மாலை 4 மணியளவில் திடீரென கருமேகம் சூழ்ந்து பலத்த மழை பொழிந்தது. ஒரு மணி நேரம் இடைவிடாது பெய்த பலத்த மழையால் பூமி குளிர்ந்து இதமான காற்று வீசியது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதேசமயம் திருவள்ளூர் நகரில் நடைபெறும் பாதாள சாக்கடைப் பணியால் வாகன ஓட்டிகள் சிரமத்துக்குள்ளாயினர்.

இதுகுறித்து வாகன ஓட்டிகள் கூறுகையில், திருவள்ளூர் நகராட்சியில் கடந்த 7 ஆண்டுகளாக ஆமை வேகத்தில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைப் பணியை விரைந்து முடிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மேலூரில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

மேலூர் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை மாலை மழை பெய்தது. அரை மணி நேரம் பெய்த மழையால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி நிலவியது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர். விவசாயத்துக்கு பலனளிக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**விருதுநகர் மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் பெற விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்பு**

விருதுநகர் மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை மூலம் வேளாண் இயந்திரம் மற்றும் வேளாண் கருவிகள் மானியத்தில் பெற விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இது தொடர்பாக ஆட்சியர் வே.ராஜாராமன் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம்: விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் வேளாண்மைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, தோட்டக்கலைத் துறை மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. வேளாண்மைத் துறையில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பயிர் சாகுபடியை அதிகரிக்கும் வகையில் தெளிப்பு நீர் பாசன கருவிகள் சிறு, குறு விவசாயிகளுக்கு முழு மானியத்தில் அளிக்கப்படுகிறது.

தேசிய நுண்ணீர் பாசனத் திட்டத்தின் மூலம் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க சிறு குறு விவசாயிகளுக்கு 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீதமும் மானியம் வழங்கப்படுகிறது. தேசிய

அபிவிருத்தி திட்டம் மூலம் வேளாண் கருவிகள் அரசு மானியத்தில் வழங்க சிறு,குறு விவசாயிகளுக்கு மானியத் தொகை ஒதுக்கப்பட்டு வழங்கப்பட இருக்கிறது. வேளாண்மை பொறியியல் துறை மூலம் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வாடகைக்கு வழங்கும் சேவை மையங்கள் சார்பில் சூரிய ஒளி மின்சாரத்தில் இயங்கும் பம்ப்செட் மோட்டார், சூரிய ஒளி கூடார உலர்த்திகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டம் மற்றும் உழவு இயந்திரங்கள், மண் தள்ளும் இயந்திரங்கள் குறைந்த வாடகையில் விவசாய பணிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் வேளாண் கருவிகளை மானியத்தில் வாங்க ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், வத்திராயிருப்பு, சிவகாசி, சாத்தூர், வெம்பக்கோட்டை பகுதி விவசாயிகள் ஸ்ரீவில்லிபுத்தூரில் இயங்கி வரும் உதவி வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் அலுவலகத்துக்கும், விருதுநகர் அருப்புக்கோட்டை, திருச்சுழி, நரிக்குடி, காரியாபட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் விருதுநகரில் செயல்பட்டு வரும் வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்துக்கும் விண்ணப்பங்களை அனுப்பி பயனடையலாம்.

மேலும், விண்ணப்பத்துடன் புகைப்படம், விவசாய நிலத்தின் சிட்டா அடங்கல், குடும்ப அட்டை நகல், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளாக இருந்தால் அதற்கான சான்றிதழ் நகல் இணைத்து மேற்குறிப்பிட்ட அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும். அரசு விதிமுறைப்படி ஒதுக்கீடு முன்னுரிமை அடிப்படையில் பரிசீலித்து வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வேளாண்மை பொறியியல் துறை மூலம் மானியத்தில் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட திட்டங்களில் பயனடைய விரும்பும் விவசாயிகள் வேளாண்மை பொறியியல் துறையில் விண்ணப்பித்து பயனடையும் படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

**மாவட்டத்தில் பலத்த மழை: வந்தவாசியில் 67 மி.மீ. பதிவு**

திருவண்ணாமலை மாவட்டத்தில் புதன்கிழமை மாலை முதல் வியாழக்கிழமை காலை வரை பலத்த மழை பெய்தது. இதில், அதிகபட்சமாக வந்தவாசியில் 67.20 மில்லி மீட்டர் மழை பதிவானது.

மாவட்டம் முழுவதும் கடந்த சில நாள்களாக தூரல் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், புதன்கிழமை மாலை 5 மணி முதல் வியாழக்கிழமை காலை வரை விட்டு விட்டு மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக வந்தவாசியில் 67.20 மில்லி மீட்டர் மழை பதிவானது.

மேலும், ஆரணியில் 9.80 மி.மீ., செய்யாறில் 26 மி.மீ., செங்கத்தில் 14.60 மி.மீ., சாத்தனூர் அணையில் 2.20 மி.மீ., போளூரில் 19.40 மி.மீ., திருவண்ணாமலையில் 11.40 மில்லி மீட்டர் மழை

பெய்தது.இந்த நிலையில், வியாழக்கிழமை மாலை 4.45 முதல் 6.30 மணி வரை திருவண்ணாமலை, வேங்கிக்கால், ஆட்சியர் அலுவலகம், அடி அண்ணாமலை, மல்லவாடி, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த மழை பெய்தது.

இதனால், திருவண்ணாமலை மத்தியப் பேருந்து நிலையத்தில் மழைநீர் குளம்போல தேங்கியது.

தொடர்ந்து பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்தது. தொடர்ந்து 2 நாள்களாக பெய்து வரும் பலத்த மழையால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**விவசாயிகளுக்கான செல்விளக்க முகாம்**

கரும்பில் வெள்ளை வேர்ப்புழு தாக்குதல் ஏற்பட்டு பயிர் சேதம் அடைவதை கட்டுப்படுத்துவது தொடர்பாக விவசாயிகளுக்கான செயல்விளக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

வேளாண்மைத் துறை, கரும்பு ஆராய்ச்சி நிலையம், பண்ணாரியம்மன் சர்க்கரை ஆலை ஆகியன சார்பில் தண்டராம்பட்டை அடுத்த கொளமஞ்சனூர் கிராமத்தில், விவசாயி ரமேஷின் கரும்பு வயலில் இதற்கான செயல்விளக்க முகாம் நடைபெற்றது.

இதில், கரும்பில் வெள்ளை வேர்ப் புழுவின் தாக்குதலின் அறிகுறிகள், கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் பூச்சியல் துறை பேராசிரியர் துரைசாமி, அத்தியந்தல் சிறுதானிய மகத்துவ மையத்தின் பூச்சியல் துறை பேராசிரியர் கோவிந்தன் ஆகியோர் விளக்கம் அளித்தனர்.

மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன், வருவாய்க் கோட்ட அலுவலர் ஆர்.உமா மகேஸ்வரி, வட்டாட்சியர் சா.தனஞ்செயன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) அக்கண்டராவ், வேளாண்மை உதவி இயக்குநர் பாலா, பண்ணாரி அம்மன் சர்க்கரை ஆலையின் துணைப் பொதுமேலாளர் மகேந்திரன், முதுநிலை மேலாளர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மை அலுவலர் நடராஜன், உதவி வேளாண்மை அலுவலர் ரமேஷ், வட்டார தொழில்நுட்ப மேலாளர் சங்கீதா, உதவி தொழில்நுட்ப மேலாளர் ரவி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ஜூலை 31-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 31-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கில் மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 31-ஆம் தேதி காலை 11 மணிக்கு

நடைபெற உள்ளது. இதில் விவசாயிகள் தங்களது குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

**பருத்தி ஏலம்: குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ. 4,399 விலை**

தஞ்சை மாவட்டம் கும்பகோணம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் புதன்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில், குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ. 4399 விலையை வியாபாரிகள் கேட்டிருந்தனர்.

6-வது வாரமாக நடைபெற்ற ஏலத்தில் விவசாயிகள் பருத்தியை 1300 குவிண்டல் கொண்டு வந்திருந்தனர்.

776 லாட்டுகளில் 1875 மூட்டைகளில் வைக்கப்பட்டிருந்த பருத்திப் பஞ்சுகளை 12-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் தாங்கள் கேட்கும் விலையை மறைமுகமாக குறித்து ஏலப் பெட்டியில் போட்டனர்.

பின்னர் ஏலப்பெட்டியைப் பிரித்து பார்த்தபோது வியாபாரிகள் அதிகபட்ச ஏலத்தொகையாக குவிண்டாலுக்கு ரூ.4399-ம், குறைந்தபட்சமாக ரூ. 4100-ம், சராசரியாக ரூ. 4250-ம் கேட்டிருந்தனர்.

கடந்த வாரம் அதிகபட்சமாக 4249-க்கு விலை கேட்கப்பட்டது. தற்போது ஒவ்வொரு வாரமும் விலை தொடர்ந்து குவிண்டாலுக்கு ரூ. 250 வரை அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**சம்பா பருவ நெல் விதைகள் விநியோகம்**

அண்ணாகிராமம் வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்துக்கான நெல் விதைகள் விநியோகம் செய்யப்படுவதாக வேளாண் உதவி இயக்குநர் சீ.இளவரசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: அண்ணாகிராமம் வட்டாரத்தில் சம்பா பருவத்துக்கான நெல் விதைகள், அண்ணாகிராமம் மற்றும் புதுப்பேட்டை வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

இங்கு விவசாயிகளுக்குத் தேவையான சாவித்திரி (பொன்மணி), வெள்ளை பொன்னி, பிபிடி 5204, சொர்ணா சப் 1, ஏடிடி 39, கோஆர் 50, என்எல்ஆர் 34449 ஆகிய நெல் ரகங்கள் விநியோகம் செய்யப்படுகிறது.

இதில், சொர்ணா சப் 1, கோஆர் 50, என்எல்ஆர் 34449 ஆகிய ரகங்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.10 மானியம் வழங்கப்படும். தேவைப்படும் விவசாயிகள் அண்ணாகிராமம் மற்றும் புதுப்பேட்டை வேளாண் விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொண்டு விதைகளை வாங்குவதுடன், தொழில்நுட்ப ஆலோசனைகளை பெற்று பயனடையலாம் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**தென்னையுடன் ஊடுபயிராக கோ-கோ: விவசாயிகளுக்கு அழைப்பு**

தென்னையுடன் ஊடுபயிராக கோ-கோ வை பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு தோட்டக் கலைத் துறை அழைப்பு விடுத்துள்ளது.

இதுகுறித்து தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் இளங்கோவன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

நல்ல மண் வளம், நீர் வளம் உள்ள தென்னந் தோப்புகளில் இணைப் பயிராக சாக் லேட் தயாரிக்க உதவும் கோ-கோ பயிரை நடவு செய்யலாம். தமிழக அரசின் அம்மா திட்டத்தின் மூலம் இதற்காக விவசாயிகளுக்கு இலவச பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளின் தோட்டத்திற்கே வந்து கோ-கோ கன்றுகள் வழங்கப்படும். ஒரு கன்றுக்கு 1.5 அடி ஆழமுள்ள குழிகள் தோண்டி நடவு செய்து முறையாக நீர் பாசனம் மற்றும் நுண்ணுயிர் பாசனம் செய்வதன் மூலம் மூன்று ஆண்டுகள் பராமரிக்க வேண் டும். இதன் மூலம் ஆண்டுக்கு ஒரு ஏக்கரில் ரூ. 1.5 லட்சம் வருமானம் கிடைக்கும். மேலும், கால்நடைகளுக்கு தீவனமும் பெறலாம். மண்ணுக்கு தழை சத்து பெறவும், தேனீக்கள் வளர்த்திடவும் ஏற்ற சூழலையும் இதன் மூலம் உருவாக்க முடியும். 80 அடி நிழல் உள்ள நீர் மற்றும் மண் வளம் உடைய தென்னந்

தோப்புகளில் ஒரு விவசாயிக்கு 10 ஏக்கர் வரை கோ-கோ பயிரிட இலவசமாக சலுகைகள் வழங்கப்படுகிறது. உடுமலை,பொள்ளாச்சி, ஆனைமலை பகுதிகளில் அடர்த்தியாக தென்னந் தோப்புகளில் கோ-கோ பயிரிட விரும்பும் விவசாயிகள் முன் பதிவு செய்து கொள்ளலாம். தோட்டக் கலைத் துறை மூலம் இதற்கு பிரத்யேக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் விவரங்களுக்கு 98420- 07125 என்ற செல்லிடப்பேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**மஞ்சளுக்கு ரூ.12 ஆயிரம் விலை நிர்ணயம் செய்யவேண்டும்**

மஞ்சளுக்கு ரூ. 12,000 விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என காலிங்கராயன் பாசன சபை கோரிக்கை விடுத்துள்ளது.

காலிங்கராயன் பாசன சபையின் மாதாந்திரக் கூட்டம் ஈரோடு அருகே உள்ள கொம்பனைப்புதூரில் வியாழக்கிழமை நடைபெற்றது. பாசன சபைத் தலைவர் வி.எம்.வேலாயுதம் தலைமை வகித்தார். செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, ஆலோசகர் கதிர்வேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில், காலிங்கராயன் வாய்க்காலில் அடுத்த ஆண்டு, 9-ஆவது மைல், 7-ஆவது பர்லாங்கில் இருந்து 15-ஆவது மைல் வரை கான்கிரீட் தளம் அமைக்க வேண்டும். பழுதடைந்த 5 பாலங்களைப் புதுப்பிக்கவும், மதகுகளுக்கு வெளிப்புறம் கேட்வால்வு பொருத்தவும், அரசுக்கு மாவட்ட நிர்வாகம் பரிந்துரைக்கவேண்டும்.

கொடிவேரி அணையில் இருந்து பவானி, காலிங்கராயன் அணைக்கட்டு வரை 5 தடுப்பணைகளைக் கட்டவும், காலிங்கராயன் அணைக்கட்டின் முன்புறம் காலிங்கராயன் சிலை, மணி மண்டபம், பூங்கா அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மஞ்சள் உற்பத்திக்குத் தேவையான இடுபொருள் கூலி பல மடங்கு உயர்ந்து விட்டது. மஞ்சள் விலை

குவிண்டால் ரூ. 6 ஆயிரம் முதல் ரூ. 7 ஆயிரம் வரை மட்டுமே விற்பனையாகிறது. இது கட்டுபடியாகாத விலையாகும்.

எனவே, மஞ்சள் விலையை குவிண்டால் ரூ. 12 ஆயிரம் வரை விலை நிர்ணயம் செய்யவேண்டும். கடந்த 2 ஆண்டுகளாக கரும்புக்கு அரசு அறிவித்த விலையை ஆலைகள் வழங்குவதில்லை. விவசாயிகளின் நலன் கருதி வெளிமாநிலங்களில் இருந்து சர்க்கரை கொள்முதல் செய்வதை நிறுத்த வேண்டும். அனைத்துச் சர்க்கரை ஆலைகளும் எத்தனால் தயாரிக்க அரசு வலியுறுத்த வேண்டும். ஒரு டன் கரும்புக்கு ரூ. 5 ஆயிரம் வழங்கவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பண்ணை எந்திர வாடகை மையங்கள் ஏற்படுத்த ரூ.20 லட்சம் மானியம்**




தர்மபுரி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் பண்ணை எந்திர வாடகை மையங்கள் ஏற்படுத்த ரூ.20 லட்சம் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் பயன்பெற விவசாயிகள், தொழில்முனைவோர் விண்ணப்பிக்கலாம். ரூ.20 லட்சம் மானியம் தர்மபுரி மாவட்டத்தில் வேளாண்மை எந்திரமயமாக்கல் உப இயக்கம் என்ற திட்டத்தின் கீழ் 2015-2016-ம் நிதி ஆண்டிற்கு நமது மாவட்டத்தில் வாடகைக்கு வழங்கும் பண்ணை எந்திர வாடகை மையங்களை ஏற்படுத்துதல் தொடர்பாக அரசாணை பெறப்பட்டுள்ளது. அரசாணையின்படி தர்மபுரி மாவட்டத்திற்கு 2 எண்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் பயிர் மற்றும் இடத்திற்கு ஏற்றாற்போல் அனைத்து வகையான பண்ணை எந்திரங்களை பெற்று விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்குவதற்கு பண்ணை எந்திர வாடகை மையங்கள் ஏற்படுத்திட மானிய தொகையாக ரூ.20 லட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.விண்ணப்பிக்கலாம்வாடகைக்கு வழங்கும்

மையங்களை அமைக்க திட்ட மதிப்பு ரூ.25 லட்சம் ஆகும். இதில் அரசு மானியமாக 40 சதவீதமும் (ரூ.10 லட்சம்) மிதமுள்ள 60 சதவீதம் (ரூ.15 லட்சம்) விவசாயக்குழுக்கள் அல்லது தனிநபர் தொழில் முனைவோர் பங்களிப்பு ஆகும். இதில் பயன்பெற விருப்பமுள்ள பண்ணை மகளிர் மேம்பாட்டு குழு, நபார்டு உதவியுடன் இயங்கும் விவசாய குழு, முன்னோடி விவசாயிகள் குழு மற்றும் தனிநபர் தொழில் முனைவோர் அனைவரும் விண்ணப்பிக்கலாம்.இதுகுறித்து விவரங்கள் அறிய உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகம் தர்மபுரி, உதவி செயற்பொறியாளர் வேளாண்மை பொறியியல்துறை, கோவிந்தசாமி நகர், அரூர் ஆகிய அலுவலகங்களை அணுகலாம். இதுதொடர்பாக மேலும் விபரங்கள் பெற 1800-425-7016- என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். தர்மபுரி கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பில் இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க பணியாளர்கள் பேரவை கூட்டம்**

தமிழ்நாடு பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க பணியாளர்கள் இணையத்தின் தர்மபுரி மாவட்ட பேரவைக்கூட்டம் தர்மபுரி பெரியார் மன்றத்தில் நேற்று நடந்தது. கூட்டத்திற்கு சங்க மாவட்ட தலைவர் கோவிந்தசாமி தலைமை தாங்கினார். மாவட்ட செயலாளர் கணபதி, மாவட்ட பொருளாளர் நாகராஜ் மற்றும் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். மாநில பொதுச்செயலாளர் வேலாயுதம் மற்றும் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு கோரிக்கைகளை விளக்கி பேசினார்கள். பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து கூட்டுறவு சங்கத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படும் பால் முழுவதையும் ஒன்றிய ஆவின்

நிர்வாகம் கொள்முதல் செய்ய வேண்டும். தர்மபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு வாரந்தோறும் பால் பணம் வழங்க வேண்டும். பால் கூட்டுறவு சங்கங்களில் 30 ஆண்டுகளுக்கு மேல் பணி வரன்முறை செய்யப்படாமல் உள்ள அனைத்து பணியாளர்களையும் பணிவரன்முறை செய்ய வேண்டும். பாலக்கோடு ஒன்றியத்தில் கொள்முதல் செய்யும் பால் முழுவதையும் தர்மபுரி பால் குளிரூட்டும் நிலையத்திற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பவை உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. இதில் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**பட்டிவீரன்பட்டி பகுதியில் 5 அடி உயரத்திலேயே பலன் தரும் உயர்ரக பலா மரக்கன்றுகள் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**

பட்டிவீரன்பட்டி பகுதியில் 5 அடி உயரத்திலேயே பலன் தரும் பலா மரக்கன்றுகளை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

<u>பலா மரங்கள்</u>

மலைப்பகுதியில் வளரும் மரங்களில் தித்திக்கும் சுவை கொண்ட பலா பழங்களை தருவது பலா மரங்கள் ஆகும். இந்த மரங்கள் சுமார் 50 அடி உயரம் வரை வளரும் தன்மை கொண்டது. இதில் ஏராளமான கிளைகள் இருக்கும். இந்த கிளைகளில் மரத்தின் தன்மைக்கு ஏற்ப ஏராளமான பலா பழங்கள் காய்க்கின்றன.

ஒவ்வொரு பலா பழமும் சுமார் 40 கிலோ எடை கொண்டதாக இருக்கும். பலா மரங்கள் மிகவும் உயரமாக இருப்பதால் அவற்றில் ஏறி பழங்களை பறிப்பது விவசாயிகளுக்கு சற்று சிரமமான காரியமே.

<u>5 அடி உயரத்தில்....</u>

இதனால் மரத்தில் மேல்புறத்தில் உள்ள பழங்களை விவசாயிகள் பறிக்காமலேயே விட்டுவிடும் நிலை உள்ளது. அந்த பழங்களும் ஒரு கட்டத்தில் மரத்தில் இருந்து பழுத்து கீழே விழுந்து சிதறுகின்றன. இதனால் அவை விவசாயிகளுக்கு பயன்படாமலேயே போகும் நிலை உள்ளது.

இதனை போக்கும் விதமாகவும், வீட்டு தோட்டத்தில் வளர்க்கும் விதமாகவும் தற்போது பாலூர் எனும் 5 அடி உயரமே வளரும் உயர்ரக பலா மரக்கன்றுகள் உள்ளன. இந்த மரங்கள் தற்போது பட்டிவீரன்பட்டி அருகே உள்ள சாலைபுதூர் பகுதிகளில் அதிகமாக வளர்க்கப்படுகின்றன. இதை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

<u>3 வருடத்தில் பலன் தரும்</u>

இது குறித்து அப்பகுதி விவசாயி ஒருவர் கூறும்போது, 'மலைப்பகுதிகளில் மட்டுமே வளரும் பலா மரங்களை தற்போது நம் வீட்டு தோட்டத்திலேயே வளர்க்கலாம். இதற்கு குறுகிய காலத்தில் பலன் தரும் பாலூர் வகை மரக்கன்றுகள் உதவுகின்றன. இது உயர்ரக மர வகையை சேர்ந்தது என்பதால் இதன் சுவை மற்ற பழங்களைவிட அதிகமாக இருக்கும்.இந்த வகையான பலா மரங்கன்றுகள் நடப்பட்ட 3–வது வருடத்தில் இருந்து பலன் அளிக்கக்கூடியதாகும். மாட்டு சாணம், மண்புழு உரம் உள்ளிட்ட இயற்கை உரங்களே இந்த மரங்களை வளர்ப்பதற்கு போதுமானதாகும். இந்த மரங்களில் குறைந்தபட்சம் 20 முதல் 30 பலா பழங்கள் வரை காய்க்கும்' என்றார்.

**வேகமாக நிரம்பிவரும் பெரும்பள்ளம் அணை விவசாயிகள் மகிழ்ச்சி**

சத்தியமங்கலம் கே.என்.பாளையம் அருகே உள்ளது பெரும்பள்ளம் அணை. இந்த அணையில் மொத்தம் 50 அடிக்கு தண்ணீர் தேக்கப்படுகிறது. குன்றி மலைப்பகுதியில் பெய்யும் மழைநீர் அணையின் முக்கிய நீர் ஆதாரமாக உள்ளது. இந்த அணையின் மூலம்

கே.என்.பாளையம், தாசரிபாளையம், அத்திக்கவுண்டன்புதூர், டி.ஜி.புதூர் உள்பட 15–க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள 1,300 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

இந்தநிலையில் கடந்த 3 நாட்களாக குன்றி மற்றும் கடம்பூர் மலைப்பகுதியில் அதிக அளவில் மழை பெய்வதால் அணைக்கு வரும் தண்ணீரின் வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் அணையின் நீர்மட்டம் கிடு கிடுவென உயர்ந்து தற்போது 30 அடியை எட்டி உள்ளது. தொடர்ந்து மழை பெய்தால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர வாய்ப்பு உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து உள்ளதால் அணையை சுற்றி உள்ள பகுதியில் உள்ள கிணறுகள், நீர் நிலைகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

**கரூர் மாவட்ட பகுதிகளில் நாவல்பழம் உற்பத்தி அதிகரிப்பு போதிய விலை இல்லாததால் வியாபாரிகள் கவலை**

கரூர் மாவட்ட பகுதிகளில் நாவல்பழம் உற்பத்தி அதிகரித்துள்ளது. ஆனால் போதிய விலை இல்லாததால் வியாபாரிகள் கவலை அடைந்துள்ளனர்.

நாவல்பழம்

மருத்துவகுணம் கொண்ட நாவல்பழம் சர்க்கரை நோயை கட்டுப்படுத்தும் மருந்தாக உள்ளது என கூறப்படுகிறது. நாவல்பழம் சீசனில் பழத்தில் உள்ள கொட்டையை எடுத்து வைத்து அதை தூளாக்கி பாலில் கலந்து தினமும் குடித்தால் சர்க்கரை நோயை கட்டுப்படுத்துகிறது. அதனால் தான் நாவல் பழத்திற்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. கரூர் மாவட்டத்தில் மாயனூர், கிருஷ்ணராயபுரம், மகாதானபுரம், சிந்தலவாடி, லாலாப்பேட்டை, குளித்தலை, திருச்சி மாவட்டத்தில் பெட்டவாய்த்தலை, பெருகமணி வரை அதிகளவிலான நாவல்பழம் மரங்கள் உள்ளது.

இங்கிருந்து நாவல்பழங்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. வியாபாரிகள் கவலைஇப்பகுதியில் உள்ள மரங்களில் இருந்து பறிக்கப்படும் பழங்களை கரூர், திருச்சி போன்ற பகுதிக்கு கொண்டு சென்று விற்கப்படுகிறது. மேலும் துறையூர், மணப்பாறை, திண்டுக்கல், முசிறி, கரூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து வியாபாரிகள் நேரில் வந்து மொத்தமாக நாவல்பழங்களை வாங்கி சென்று பல்வேறு பகுதிகளில் விற்பனை செய்கின்றனர். இது குறித்து நாவல்பழம் வியாபாரிகளிடம் கேட்ட போது அவர்கள் கூறியதாவது:- இந்த ஆண்டு கோடை மழையால் நாவல்பழம் உற்பத்தி அதிகரித்துள்ளது. நாவல்பழத்தை நாங்கள் மண்ணில் விழ விடாமல் மரத்தை சுற்றி கொசுவலையை கட்டி மரத்தில் ஏறி கிளைகளை உலுக்குகிறோம். இதனால் நாவல்பழம் மண்ணில் விழாமல் சுத்தமாக கிடைக்கிறது. இந்த ஆண்டு நாவல்பழம் உற்பத்தி அதிகமானதால் ஒரு கிலோ ரூ.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது. சிறிய ஒலக்கு ரூ.5-க்கும், பெரிய ஒலக்கு ரூ.10-க்கும் விற்கப்படுகிறது. நாவல்பழம் அதிக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு இருந்தாலும் எங்களுக்கு போதுமான விலை இல்லை இதனால் நாங்கள் கவலை அடைந்துள்ளோம் என்றனர்.

**மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் பொதுமக்கள் கோரிக்கை**

பரமத்தி வேலூர் காவிரியாற்றில் ஆடிப்பெருக்கு பண்டிகைக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆடிப்பெருக்கு

=நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள பொதுமக்கள் ஒவ்வொரு

ஆண்டும் பரமத்தி வேலூரில் ஆடிப்பெருக்கு பண்டிகையின் போது பரிசல் போட்டி, மோட்ச தீபம் மற்றும் தலையில் தேங்காய் உடைக்கும் நிகழ்ச்சி ஆகியவை நடைபெறுவது வழக்கம். மேலும் புதுமணத் தம்பதியினர் காவிரியில் நீராடி, பூஜைகள் செய்து காவிரி தாயை வணங்கி மஞ்சள் கயிறு கட்டிக்கொள்வர்.குல தெய்வ கோவில்களில் பாரம்பரியமாக வைத்துள்ள கத்தி, அரிவாள், கம்பு, வேல் உள்ளிட்ட ஆயுதங்களை பரமத்தி வேலூர், ஜேடர்பாளையம், மோகனூர் மற்றும் கரூர் மாவட்டம் தவிட்டுப்பாளையம் உள்ளிட்ட காவிரியாற்றில் சுத்தம் செய்வர். பின்னர் அந்த ஆயுதங்களுக்கு பூஜைகள் செய்து வழிபடுவர். மேலும் சிலர் பூஜையின் போது தலையில் தேங்காய் உடைத்து வழிபாடு நடத்துவர்.

பொதுமக்கள் கோரிக்கைஆடிப்பெருக்கை முன்னிட்டு முதல் நாள் இரவு முதலே பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், மாவட்டத்தின் பல்வேறு பகுதியில் இருந்தும் பொதுமக்கள், புதுமணத் தம்பதியினர் உள்ளிட்டோர் காவிரியில் புனித நீராடி பல்வேறு பூஜைகள் செய்வது வழக்கம். மாலையில் மீனவர் சங்கம் மூலம் நடத்தப்படும் பரிசல் போட்டியை பார்ப்பதற்காகவும், நாடு நலம் பெறவும், விவசாயம் பெருகவும், நல்ல மழை பெய்யவும், சுபிட்சம் பெறவும் காவிரியில் விடப்படும் மோட்ச தீபத்தை காண்பதற்கும் லட்சக்கணக்கான பொதுமக்கள் காவிரியில் கூடுவது வழக்கம்.தற்பொழுது காவிரியாற்றில் குடிநீர் பயன்பாட்டிற்கு மட்டுமே சிறிதளவு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் வறண்ட காவிரி போல் காட்சியளிக்கிறது. இந்தநிலை ஆடிப்பெருக்கு வரை நீடித்தால் பரிசல் போட்டியும், மோட்ச தீபத்தையும் விட முடியாத சூழ்நிலை ஏற்படும். எனவே அரசு ஆடிப்பெருக்கையின் போது காவிரியில் கூடுதலாக தண்ணீர் திறந்து விட வேண்டும் என பொதுமக்களும், பக்தர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மரவள்ளிக்கிழங்கில் நோய் தாக்குதலால் விலை சரிவு விவசாயிகள் கவலை**



பரமத்திவேலூர் பகுதியில் மரவள்ளிக் கிழங்கில் நோய் தாக்குதலால் அதன் விலை தொடர்ந்து சரிந்து வருகிறது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.மரவள்ளிக்கிழங்கில் நோய் தாக்குதல் நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகாவுக்குட்பட்ட பரமத்தி, கபிலர்மலை, அண்ணாநகர், வாழவந்தி, பெருங்குறிச்சி, சோழசிராமணி, திருமல், பாகம்பாளையம், சின்னமருதூர், கூடச்சேரி, காசப்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 1000-க்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்துள்ளனர். இந்த பகுதியில் விளையும் மரவள்ளிக்கிழங்குகள் வியாபாரிகள் மூலம் வாங்கப்படுகிறது. இதை புதன்சந்தை, புதுச்சத்திரம், மின்னாம்பள்ளி, செல்லப்பம்பட்டி, ஆத்தூர், மலைவேப்பாய்குட்டை உள்ளிட்ட பல்வேறு

பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு மூலம் சிப்ஸ் தயார் செய்பவர்களுக்கும், சேகோ தொழில் சாலைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் மரவள்ளிக்கிழங்கு அதில் உள்ள டார்ச் மற்றும் பாயிண்ட் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. விவசாயிகள் கவலைஅதே போல் ஜவ்வரிசி விலை சேகோ சர்வ் மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த நிலையில் கடந்த வாரம் 1 டன் மரவள்ளிக்கிழங்கு ரூ.4 ஆயிரம் வரை விற்பனையானது. இந்த வாரம் மரவள்ளிக்கிழங்கு டன் ஒன்று ரூ.3500-க்கு விற்பனை ஆனது. தற்போது மரவள்ளிக்கிழங்கு பயிரில் செம்போன நோய் தாக்குதல் ஏற்பட்டு மரவள்ளிக்கிழங்கில் உள்ள இலைகள் முழுவதும் உதிர்ந்து விடுகிறது. இதனால் மரவள்ளிக் கிழங்கின் விளைச்சல் குறைந்து விடும் சூழ்நிலையும் உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து வருகிறார்கள்.

**ராசிபுரத்தில் அதிகபட்சமாக 11 மி.மீட்டர் மழைப்பதிவு**



நாமக்கல் மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக வெயில் பொதுமக்களை சுட்டெரித்து வந்தது. இந்த நிலையில் ஒரிரு நாட்கள் மாலைநேரங்களில் விட்டு, விட்டு சாரல்மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலையும் ஆங்காங்கே பரவலாக மழை பெய்தது. ராசிபுரத்தில் அதிகபட்சமாக 11 மி.மீட்டர் மழைப்பதிவாகி இருந்தது. நேற்று காலை 6 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பதிவான மழை அளவு (மி.மீட்டரில்) வருமாறு :-ராசிபுரம்-11, திருச்செங்கோடு-10, எருமப்பட்டி-5, சேந்தமங்கலம்-1.5, நாமக்கல்-1. நாமக்கல் நகரை பொறுத்த வரையில் நேற்று காலையில் வெயில் சுட்டெரித்தாலும், பிற்பகலுக்கு மேல் வானம் மப்பும், மந்ததாரமுமாக காட்சி அளித்தது.

**குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 2–வது சீசனுக்கான ஏற்பாடுகள் தீவிரம்**



குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 2–வது சீசனுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

ஏற்பாடுகள் தீவிரம்

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 2–வது சீசனுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதையொட்டி பூங்காவில் தற்போது மலர் செடிகளுக்கு விதைகள் நடவு பணி நேற்று தொடங்கியது. ஜின்யா, காஸ்சப் போன்ற ரக மலர்களுக்கான விதைகள் நடவு செய்யப்படுகிறது.

இது குறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:–

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் கடந்த மே மாதம் 1 லட்சம் மலர் நாற்றுகள் நடப்பட்டன. சீசன் முடிந்த நிலையிலும் பல செடிகள் இன்னும் பூக்கும் தருவாயில் உள்ளன. மீதமுள்ள செடிகளில் விதைகள் முளைத்துள்ளன. இந்த விதைகளை பறித்து 2–வது சீசனுக்காக நடவு செய்யும் தொடங்கப்பட்டுள்ளன. இதில் ஜின்யா, காஸ்சப் ஆகிய மலர் ரகங்களின் விதைகள் நடப்படுகிறது.

35 ஆயிரம் மலர் நாற்றுகள்

மேலும் பூங்காவுக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவருவதற்காக 35 ஆயிரம் மலர் நாற்றுகள் நடைபெற உள்ளது. இந்த பணிகள் இன்னும் ஒரிரு நாட்களில் தொடங்கப்படும். இவைகள் செப்டம்பர் மாதம் இறுதியில் பூக்கும்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**குன்னூரில் பருவநிலை மாற்றம்: தேயிலை செடிகளில் கொப்புள நோய் தாக்குதல்**



குன்னூரில் பருவநிலை மாற்றம் காரணமாக தேயிலை செடிகளில் கொப்புள நோய் தாக்குதல் ஏற்பட்டு உள்ளது. தேயிலை விவசாயம்குன்னூர் பகுதியில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விவசாயிகள் பச்சை தேயிலையை கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளுக்கு வினியோகம் செய்து வருகின்றனர். தற்போது கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.6 முதல் ரூ.7 வரை மட்டுமே விலை கிடைத்து வருகிறது.

இதனால் பச்சை தேயிலை பறிக்கும் தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது. நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பச்சை தேயிலைக்கு போதிய விலை கிடைக்காததால் பெரும்பாலான தொழிலாளர்கள் வேலை தேடி பிற மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர்.கொப்புள நோய்இந்த நிலையில் குன்னூரில் பருவநிலை மாற்றம் காரணமாக தேயிலை செடிகளில்

கொப்புளநோய் தாக்கி வருகிறது. மேலும், கொப்புள நோய் தாக்கி உள்ள தேயிலை இலைகளை பெரும்பாலான தொழிற்சாலைகள் வாங்குவதுஇல்லை. இதனால் விவசாயிகள் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்து வருகிறார்கள்.பச்சை தேயிலைக்கு குறைந்த விலை கிடைத்து வரும் நிலையில், தேயிலை செடிகளை கொப்புள நோய் தாக்கி வருவதால் மிகுந்த நஷ்டம் ஏற்பட்டு உள்ளதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.பருவநிலை மாற்றம்

இதுகுறித்து உபாசி மண்டல ஆராய்ச்சி மைய உதவி இயக்குனர் டாக்டர் உதயபானு கூறியதாவது:- குன்னூரில் இந்த ஆண்டில் ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் 21-ந் தேதி வரை 110 சென்டி மீட்டர் மழை பெய்து உள்ளது.

இதே காலக்கட்டத்தில் கடந்த ஆண்டு 52 சென்டி மீட்டர் மழை பெய்து உள்ளது. தற்போது பருவநிலையில் அடிக்கடி மாற்றம் ஏற்பட்டு வருவதால் தேயிலை செடியில் கொப்பள நோய் மற்றும் இலைப்பேன் தாக்குதல் தென்பட்டு வருகிறது. இதனை கட்டுப்படுத்த உபாசி ஆராய்சி மையத்தை விவசாயிகள் அணுக வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்ட பணிகளை நிர்வாக இயக்குனர் ஆய்வு**



பெரம்பலூர் மாவட்டத்தில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தி¢ட்ட பணிகளை தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை நிர்வாக இயக்குனர் ஆனந்தகுமார் ஆய்வு செய்தார்.திட்ட பணிகள்தமிழ்நாடு அரசு மழையின்போது பெறப்படும் நீரினை மேம்பாடு செய்து நிலத்தடியில் பாதுகாக்க நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் மூலம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில்தினசரி பயன்பாட்டிற்காக பொதுப்பணித்துறையின் மூலம் போடப்பட்ட ஆழ்துளை கிணறுகளில் நீர் இன்றி வறண்ட நிலை ஏற்பட்டது. மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நீர்பற்றாக்குறையை போக்கும் வகையில் மழைநீரை சேகரித்து நிலத்தடி நீரை மேம்படுத்த அலுவலக வளாக பராமரிப்பு நிதியின்கீழ் 2012-ம் ஆண்டு நீர்உறிஞ்சு குழிகள் 400 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டன. நீர் உறிஞ்சு குழிகள் இந்த உறிஞ்சு குழிகள் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் மழைநீர் உயரமான இடத்தில் இருந்து பள்ளமான இடத்¢திற்கு செல்வதை தடுக்கும் வகையில் உள்ள இடங்களில் அமைக்கப்பட்டன.

மேலும் மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு இடதுபுறத்தில் காலியாக இருந்த இடத்தில் மரம் வளர்ப்பதுடன், நீர் உறிஞ்சுகுழிகள் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக அந்த பகுதியில் 800-க்கும் மேற்பட்ட குழிகள் வெட்டப்பட்டு அந்த குழிகளில் இருந்த கடின மண் அப்புறப்படுத்தப்பட்டு, இளகு தன்மை கொண்ட நீரை தேக்கிவைக்கும் தன்மை பெற்ற மண் கொட்டப்பட்டு, அதன்மீது 800 மரக்கன்றுகள் நடப்பட்டன.

நிர்வாக இயக்குனர்ஆய்வுஇந்த மரக்கன்றுகள் குறுகிய காலத்திலேயே நன்கு வளர்ச்சி பெற்றதுடன், நீரை நிலத்தடிக்கு கொண்டு செல்லும் பணியும் மேற்கொண்டன. இந்த காரணங்களால் தினசரி நீர் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்தது. மேலும் பெரம்பலூர் நகராட்சியின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் முன் பகுதியிலும், நீதிமன்றத்திற்கு பின்பகுதியிலும் கிணறுகள் அமைக்கப்பட்டன. தற்போது இந்த கிணறுகள் அனைத்து நாட்களிலும் நீர் நிறைந்து காணப்படுகின்றன. மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த பணிகளை தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமைநிர்வாக இயக்குனர் ஆனந்தகுமார் ஆய்வு செய்தார். மேலும் சத்திரமனை பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு பணிகளையும் ஆய்வு செய்தார்.இந்த ஆய்வுகளின்போது மாவட்ட வருவாய் அதிகாரி மீனாட்சி, வேளாண்மை பொறியியல்துறை செயற்பொறியாளர் ராஜேந்திரன் மற்றும் வேளாண்மைத்துறை அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**இலவச காளான் வளர்ப்பு பயிற்சி**



திருப்பத்தூர் அருகே உள்ள பிள்ளையார்பட்டி பஞ்சாப் நேஷனல் வங்கி உழவர் பயிற்சி மையத்தில் இலவச காளான் வளர்ப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. முகாமிற்கு அதன் இயக்குனர் குறிஞ்சிநாதன் தலைமை தாங்கினார். பயிற்சியினை புதுக்கோட்டை பயிற்றுநர் சாலைவள்ளான் நடத்தினார். பயிற்சியில் காளானின் முக்கியத்துவம், தன்மைகள், ரகம் ஆகியவை குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டது. மேலும் காளான் படுக்கை தயாரிக்கும் முறைகள் மற்றும் காளான் வளர்ப்பில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்தும், அதனை தீர்க்கும் வழி முறைகள் குறித்தும் விரிவாக எடுத்து கூறப்பட்டது. பயிற்சியில் 110 பேர்கள் கலந்து கொண்டனர்.

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் உரிய விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி**

கும்பகோணம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. பருத்திக்கு உரிய விலை கிடைத்ததால் விவசாயிகள்

மகிழ்ச்சி அடைந்தனர்.பருத்தி ஏலம்கும்பகோணம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் நெல், கரும்புக்கு அடுத்தபடியாக பெருமளவு பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது.இந்த ஆண்டு கும்பகோணம் வேளாண்மை கோட்டத்தில் 350 ஹெக்டேரிலும், பாபநாசம் கோட்டத்தில் 150 ஹெக்டோ¤லும், திருப்பனந்தாள் கோட்டத்தில் 140 ஹெக்டேரிலும், திருவிடைமருதூர் கோட்டத்தில் 200 ஹெக்டேரிலும் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அது தற்போது நன்கு வளர்ச்சி அடைந்து அறுவடை செய்யப்படுகிறது.

அறுவடை செய்யப்படும் பருத்தி பஞ்சுக்கு தரகர்இன்றி விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்க செய்ய தமிழக அரசு சார்பில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் மூலம் மறைமுக ஏலம் நடத்தப்படுகிறது. அதன்படி, கும்பகோணம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் புதன்கிழமையும், திருப்பனந்தாளில் வியாழக்கிழமையும், பாபநாசத்தில் வெள்ளிக்கிழமையும் மறைமுக ஏலம் நடத்தப்படுகிறது. விவசாயிகள் மகிழ்ச்சி6-வது வாரமாக கும்பகோணத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் தென்னூர், அகராத்தூர், இன்னம்பூர், நாச்சியார்கோவில், மாத்தூர், பம்பப்படையூர், செருகுடி, கிருஷ்ணாபுரம் ஆகிய பகுதிகளிலிருந்து 1,300 குவிண்டால் பருத்தி பஞ்சுகள் ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன.ஏலத்தில் விழுப்புரம், ஊத்தங்கரை, திருப்பூர், கெங்காபுரம், ஈரோடு, தேனி, செம்பனார்கோவில் ஆகிய பகுதிகளிலிருந்து வியாபாரிகள் கலந்துகொண்டு தாங்கள் கேட்கும் விலையை மறைமுகமாக குறித்து ஏலப்பெட்டியில் போட்டனர். பின்னர் அந்த ஏலப்பெட்டி ஒழுங்குமுறை விற்பனை கூட தனி அலுவலர் கலியராஜ், கண்காணிப்பாளர் பிரியாமாலினி முன்னிலையில் பிரித்து பார்க்கப்பட்டது. அப்போது ஒரு குவிண்டால் பருத்தி பஞ்சு ரூ.4,399-க்கு ஏலம் போனது. குறைந்தபட்சமாக ரூ.4,100-க்கும், சராசரியாக ரூ.4,250-

க்கும் விலை கேட்கப்பட்டிருந்தது. பருத்திக்கு உரிய விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**குறைந்த விலையில் உரம் என்ற கவர்ச்சியான அறிவிப்புகளை நம்பி விவசாயிகள் ஏமாற வேண்டாம் வேளாண்மை அதிகாரி அறிவுரை**

தேனி

குறைந்த விலையில் உரம் தருகிறோம் என்ற கவர்ச்சியான அறிவிப்புகளை நம்பி விவசாயிகள் ஏமாற வேண்டாம் என்று வேளாண்மை தரக்கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தேனி வேளாண்மை தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் ஜெயப்பாண்டியன் கூறியதாவது:–

கண்காணிப்பு குழு

விவசாயிகள் தாங்கள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் பரிந்துரை செய்யும் அளவில், பரிந்துரை செய்யும் உரம் மற்றும் பூச்சிக் கொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டும். அங்கீகாரம் பெற்ற, விற்பனைக்கான உரிமம் பெற்ற கடைகளில் மட்டுமே உரம், பூச்சி மருந்துகளை வாங்கி பயன்படுத்த வேண்டும்.

தனியார் சிலர் அனுமதியின்றி பூச்சிக் கொல்லி மருந்து மற்றும் போலியான உரம் தயாரிப்பு செய்து விற்பனை செய்வதாக விவசாயிகளிடம் இருந்து புகார்கள் வந்தன. இதையடுத்து மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் உத்தரவின்பேரிலும், வேளாண்மை இணை இயக்குனர் வெங்கடசுப்பிரமணியன் அறிவுரையின் பேரிலும் உரம் கண்காணிப்பு குழு அமைத்து தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

போலி உரம்

சிலர், வெளி மாநிலங்களில் இருந்து வரி இல்லாமலும், விற்பனை ரசீது இல்லாமலும் உரம் வந்து உள்ளதால் அதனை குறைந்த விலைக்கு தருகிறோம் என்று விவசாயிகளை நம்ப வைத்து விற்பனை செய்து வருவதாக தகவல்கள் கிடைத்து உள்ளன.

விற்பனை உரிமம் இல்லாமலும், உரிய ரசீது இல்லாமலும் போலி உரம் விற்பனை செய்யப்பட வாய்ப்புகள் உள்ளன. தேனி மாவட்டத்தில் இதுபோன்ற கவர்ச்சிகரமான அறிவிப்புகளை நம்பி களைக்கொல்லி வாங்கி பயன்படுத்திய ஒரு விவசாயியின் நிலத்தில் நெற்பயிர்கள் கருகியுள்ளன. இதுபோன்ற அறிவிப்புகளை நம்பி விவசாயிகள் ஏமாற வேண்டாம். இதுபோன்று யாரேனும் கவர்ச்சிகரமான அறிவிப்புகளை கூறினால், அதுகுறித்து வேளாண்மை தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் அலுவலகத்திற்கு தகவல் கொடுக்க வேண்டும். உரம், பூச்சிக்கொல்லி மருந்துகளை வாங்கும் போது விவசாயிகள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.இவ்வாறு உதவி இயக்குனர் ஜெயப்பாண்டியன் கூறினார்.

**குற்றாலத்தில் குவிந்து இருக்கும் மருத்துவ குணம் நிறைந்த பழங்கள் சுற்றுலா பயணிகள் ஆர்வத்துடன் வாங்கி செல்கிறார்கள்**

குற்றாலத்தில் மருத்துவ குணம் நிறைந்த பல வகை பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அவற்றை சுற்றுலா பயணிகள் மிகவும் ஆர்வத்துடன் வாங்கி செல்கிறார்கள்.குற்றாலம் சீசன்நெல்லை மாவட்டம் குற்றாலத்தில் தற்போது சீசன் நன்றாக உள்ளது. அனைத்து அருவிகளிலும் தண்ணீர் விழுகிறது. குளிர்ந்த காற்று வீசி, மேக மூட்டமாக குளுமையான சூழல் நிலவி சுற்றுலா பயணிகளை உற்சாகப்படுத்தி வருகிறது. தினமும் பல்வேறு இடங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் குற்றாலத்திற்கு வந்து சீசனை அனுபவித்து செல்கிறார்கள். பலர் இங்கு தங்கி இருந்தும் அனுபவிக்கிறார்கள். வழக்கமாக இந்த சீசனுக்கு பல்வேறு வகையான

பழங்கள் விற்பனை செய்யப்படும். அதே போல் இந்த ஆண்டும் விற்பனை தொடங்கி உள்ளது.பழம் வகைகள் பழங்களை கடைகளிலும், சாலையின் ஓரங்களிலும் விற்பனை செய்கிறார்கள். இதில் குறிப்பாக மங்குஸ்தான், ரம்டான், ஸ்டார் ப்ரூட், முட்டை பழம், போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன. இவை மருத்துவ குணம் நிறைந்ததாகும்.மங்குஸ்தான் பழங்கள் உடலுக்கு குளிர்ச்சியையும், குடலுக்கு ஆரோக்கியத்தையும் கொடுப்பவையாகும். வயிற்றுப்புண் உள்ளிட்ட வயிறு தொடர்பான நோய்கள் உள்ளவர்கள் இதனை சாப்பிட்டால் குணமாகும். இதே போல் ரம்டான் பழங்களும் இதே குணம் உடையவை. ஸ்டார் ப்ரூட் பழங்கள் சூட்டை தணிக்கும் ஆற்றல் உள்ளது. முட்டை பழங்களும், உடலுக்கு நல்ல பழங்கள் என்று வியாபாரிகள் கூறுகிறார்கள்.இந்த பழங்கள் குற்றாலம் மலைப்பகுதியில் இருந்தும், வெளியூர்களில் இருந்தும் வரவழைக்கப்படுகின்றன. சீசன் இல்லாத காலங்களில் குற்றாலம், தென்காசி பகுதிகளில் இந்த பழங்கள் கிடைப்பதில்லை. எனவே சுற்றுலா பயணிகள் அதிக ஆர்வத்துடன் இவற்றை வாங்கி செல்கின்றனர்.

**வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.3 லட்சத்துக்கு சூரியகாந்தி விதை ஏலம்**



வெள்ளகோவிலில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை சூரியகாந்தி விதை, ஏலம் முறையில் விற்பனை செய்யப்படுவது வழக்கம். அந்த வகையில் நேற்று நடைபெற்ற ஏலத்திற்கு திண்டுக்கல், வெள்ளகோவில் பகுதியை சேர்ந்த 25–க்கும் மேற்பட்ட விவசாயிகள் 9 ஆயிரத்து 50 கிலோ சூரியகாந்தி விதையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.ஏலத்தில் சூரியகாந்தி விதை ஒரு கிலோ 31 ரூபாய் 95 பைசா முதல் 35 ரூபாய் 95 பைசா வரை ஏலம் போனது. ஏலத்தின் மொத்த மதிப்பு ரூ.3 லட்சத்து ஆயிரத்து 672 ஆகும். இந்த தகவலை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் மகுடேஸ்வரன் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனைகளை வழங்க வேண்டும் மேயர் கார்த்தியாயினி பேச்சு**




விவசாயிகளுக்கு வேளாண்மை அதிகாரிகள் ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று மேயர் கார்த்தியாயினி பேசினார்.

<u>விழிப்புணர்வு பெருவிழா</u>

வேலூர் விரிஞ்சிபுரத்தில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் காரீப முன்பருவ விழிப்புணர்வு பெருவிழா மற்றும் கருத்தரங்கு நேற்று நடந்தது. விழிப்புணர்வு பெருவிழாவில் பயிர் சாகுபடி குறித்த வேளாண் கண்காட்சி அரங்கம் அமைக்கப்பட்டிருந்தது. அணைக்கட்டு தொகுதி கலையரசு எம்.எல்.ஏ. கண்காட்சி அரங்கை திறந்து வைத்து பார்வையிட்டார்.

அதைத்தொடர்ந்து நடந்த கருத்தரங்குக்கு மேயர் கார்த்தியாயினி தலைமை தாங்கினார். வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் அறிவியல் மைய தலைவர் பாண்டியன், வேளாண்மை இணை இயக்குனர் ஜெயசுந்தர், ஒன்றிய குழுத்தலைவர்கள் சூரியகலா, ரஞ்சிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜோஸ்வா டேவிட்சன் வரவேற்றார்.

**காரீப் முன்பருவ விழிப்புணர்வு கையேட்டை மேயர் கார்த்தியாயினி வெளியிட்டு பேசியதாவது:–**

<u>மண்ணின் மைந்தர்கள்</u>

உண்மையான மண்ணின் மைந்தர்கள் விவசாயிகள் தான். முதல்–அமைச்சர் ஜெயலலிதா ஆட்சியில் தமிழகம் என்றும் முதன்மை மாநிலமாக இருந்து வருகிறது. தற்போது மழை அதிகம் இல்லை. நிலத்தடி நீர் அதிகமாக உள்வாங்கி கொண்ட மாவட்டத்தில் வேலூர் 3–வது இடத்தில் உள்ளது.

வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் மலை இருப்பதால் கந்தகதன்மை கொண்டு உள்ளதால் மழை குறைவாக உள்ளது. நிறைய விவசாயிகள் சரியான நேரத்தில் விதைகள் கிடைப்பதில்லை என்று புகார் தெரிவிக்கின்றனர். விதைகள் வந்தவுடன் அவர்களுக்கு வேளாண்மை அதிகாரிகள் தெரிவிக்க வேண்டும்.

<u>ஆலோசனைகளை...</u>

விவசாயிகளுக்கு என்னென்ன திட்டங்கள் உள்ளன, எந்த நேரத்தில் என்ன பயிர் செய்யலாம், எவ்வளவு மகசூல் கிடைக்கும் என்பது போன்ற ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வேளாண்மை அதிகாரிகள் வழங்க வேண்டும்.

300–க்கும் மேற்பட்ட கீரை வகைகள் உள்ளன. இதில் பல்வேறு மருத்துவ குணங்கள் கொண்ட கீரை வகைகளும் உள்ளன. கீரையின் பயன்கள் குறித்து வேளாண்மை துறை அதிகாரிகள் விவசாயிகளிடம் கூறி அதனை வளர்க்க செய்ய வேண்டும்.

நல்ல மகசூல், நல்ல லாபம் என்று ரசாயனம் போட்டு, போட்டு நமது மண்வளத்தை நாமே கெடுத்து வருகிறோம். அளவான ரசாயனங்களை போட்டு மண்ணின் தன்மையை பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கரும்பு சாகுபடி மற்றும் உணவு பதப்படுத்துதல் கையேட்டை கலையரசு எம்.எல்.ஏ. வெளியிட்டு பேசியதாவது:–

<u>நிலத்தடி நீர்மட்டம்</u>

மனிதன் உயிர்வாழ உணவு, உடை, இருப்பிடம் ஆகியவை அத்தியாவசியமானது. இதில் உணவை முதன்மையானதாக வைத்திருப்பதில் இருந்தே விவசாயத்தின் பெருமையை அறிந்து கொள்ளலாம்.

வேலூர் மாவட்டத்தில் காரீப முன்பருவம் ஜூன் முதல் செப்டம்பர் மாதம் வரையிலான காலத்தில் தென்மேற்கு பருவமழையை நம்பியே பயிரிடப்படுகிறது.

மாவட்டத்தில் 1,100 மில்லிமீட்டர் மழை தேவைப்படுகிறது. ஆனால் நமக்கு சராசரியாக 370 மில்லிமீட்டர் மட்டுமே பெய்கிறது.

மாவட்டத்தில் 430 பெரிய ஏரிகள், 915 சிறுபாசன ஏரிகள், 1 லட்சம் கிணறுகள், 1 லட்சத்து 7 ஆயிரத்து 475 ஆழ்துளை கிணறுகள் வறண்டு கிடக்கிறது. நெல், நிலக்கடலை, கரும்பு ஆகியவற்றின் மகசூல் குறைந்து வருகிறது. விவசாயிகள் புதிய கண்டுபிடிப்புகளை பயன்படுத்த வேண்டும். வறட்சியை தாங்கக்கூடிய, தண்ணீர் குறைந்த, சந்தை மதிப்புமிக்க நெல், கரும்பு, மணிலா பயிர் செய்ய வேண்டும்.

<u>விலை நிர்ணயம்</u>விவசாயிகளே என்றைக்கு தங்களின் உற்பத்தி பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்கிறார்களோ அப்போது தான் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும். வனவிலங்குகளால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். பூச்சிமருந்து, விதை தரமானதாக இருக்க வேண்டும். விவசாயிகள் விழிப்புடன் இருந்தால், சமுதாயம் விழிப்படையும். நாடும் செழிப்படையும்.

இவ்வாறு அவர் பேசினார்.முடிவில் உதவி பேராசிரியர் செந்தில்வேல் நன்றி கூறினார். இதில் வேளாண்மை துறை அதிகாரிகள், வேளாண்மை

அறிவியல் மைய அதிகாரிகள் மற்றும் 400–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**ஏலகிரிமலையில் இயற்கை கிராம திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு பயிற்சி**

ஜோலார்பேட்டையை அடுத்த ஏலகிரிமலையில் வேளாண்மைத்துறை சார்பில், இயற்கை கிராம திட்டத்தின் மூலம் ஏலகிரிமலையை இயற்கை கிராமமாக மாற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. ஏலகிரிமலை விவசாயிகளுக்கு 2 நாட்கள் இத்திட்டம் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சிக்கு வேளாண்மை இணை இயக்குனர் ஜெய்சுந்தர் தலைமை தாங்கினார். துணை வேளாண்மை அலுவலர் ஆ.ராஜ்குமார் வரவேற்றார். பேராசிரியர் பாண்டியன், திட்டத்தில் வழங்கப்படும் இடுபொருட்களின் முக்கியத்துவம் பற்றியும், வேளாண்மை உதவி இயக்குனர் கவுதம்குமார், திட்டத்தின் பயன்கள் குறித்தும், வேளாண்மை அலுவலர் அர்ச்சனா, இடுபொருட்களை பயன்படுத்தும் விதம் பற்றியும் விளக்கமளித்தனர்.

பயிற்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் துணை வேளாண்மை அலுவலர் ராஜ்குமார், உதவி வேளாண்மை அலுவலர் வேல்முருகன் ஆகியோர் நன்றி கூறினர்.

**பஞ்சாப்பில் இருந்து ரெயில் மூலம் 22 ஆயிரம் டன் கோதுமை மூட்டைகள் திருவண்ணாமலைக்கு வந்தன**

பஞ்சாப் மாநிலத்தில் இருந்து சரக்கு ரெயில் மூலம் 22 ஆயிரம் டன் கோதுமை மூட்டைகள் நேற்று திருவண்ணாமலைக்கு வந்தன.

<u>22 ஆயிரம் டன் கோதுமை</u>

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ரேஷன் கடைகளுக்கு வழங்கப்படும் அரிசிகள் ஆந்திர மாநிலத்தில் இருந்து சரக்கு ரெயில்கள் மூலம் திருவண்ணாமலைக்கு கொண்டு வரப்பட்டு அங்கிருந்து அந்தந்தப்பகுதி குடோன்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, நேற்று திருவண்ணாமலை மாவட்ட ரேஷன் கடைகளுக்கான கோதுமை மூட்டைகள் பஞ்சாப் மாநிலத்தில் இருந்து ரெயில்கள் மூலம் கொண்டுவரப்பட்டன.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள லூதியானா என்ற இடத்தில் இருந்து 22 ஆயிரம் டன் கோதுமை மூட்டைகள் நேற்று காலை சரக்கு ரெயில் மூலம் திருவண்ணாமலை ரெயில் நிலையத்துக்கு கொண்டு வரப்பட்டது.

லாரிகள் மூலம்...

அங்கிருந்து லாரிகள் மூலம் போளூர், ஆரணி, செய்யாறு, வந்தவாசி, செங்கம் போன்ற பகுதிகளில் உள்ள குடோன்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. பின்னர் இந்த குடோன்களில் இருந்து ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்படும்.

**கொளமஞ்சனூரில் கரும்பு பயிரில் வேர்ப்புழு தாக்குதல் தடுப்பு பயிற்சி கலெக்டர் முன்னிலையில் நடந்தது**

கொளமஞ்சனூரில் கரும்பு பயிரில் வெள்ளை வேர்ப்புழு தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. கலெக்டர் ஞானசேகரன் முன்னிலையில் நடந்தது.

வேர்ப்புழு தாக்குதல் தடுப்பு பயிற்சி

தச்சம்பட்டு, தலையாம்பள்ளம் உள்பட பல்வேறு பகுதிகளில் சுமார் 350 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு பயிர்களில் வெள்ளை வேர்ப்புழு தாக்கி பயிர்கள் முற்றிலும் காய்ந்துவிட்டன. இதுபற்றி விவசாயிகள் கலெக்டரிடம் புகார் செய்தனர்.

அதைத்தொடர்ந்து தண்டராம்பட்டு வட்டம் கொளமஞ்சனூர் கிராமத்தில் கரும்பு பயிரில் வெள்ளை வேர்ப்புழு தாக்குதலை தடுப்பது பற்றிய பயிற்சி கலெக்டர் ஞானசேகரன் முன்னிலையில் நடந்தது. கரும்பு பயிரில் வெள்ளை வேர்ப்புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்த செயல் விளக்கம் நடத்தப்பட்டது.

இச்செயல் விளக்கத்தை வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் துரைசாமி செய்து காட்டினார்.

மேலும் வெள்ளை வேர்ப்புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்த கீழ்கண்ட ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளை பின்பற்றுமாறு விவசாயிகளிடம் தெரிவித்தனர்.

<u>தாய் வண்டுகளை அழிக்க வேண்டும்</u>

கோடை மழைக்குபின் தாய் வண்டுகளை சேகரித்து அழிக்க வேண்டும், விளக்குப்பொறி அமைக்க வேண்டும், கோடை உழவு செய்து புழுக்களை வெளிக்கொணர வேண்டும்.

செயல் விளக்கத்தில் திருவண்ணாமலை உதவி கலெக்டர் உமாமகேஷ்வரி, அத்தியந்தல் சிறுதானிய மகத்துவ மையத்தின் வேளாண் விஞ்ஞானிகள், பண்ணாரி சர்க்கரை ஆலை மற்றும் கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலை அலுவலர்கள் பங்கேற்றனர்.

இதில் பல்வேறு விவசாயிகள் பங்குபெற்று பயனடைந்தனர்.

இவ்வகையான வேர்ப்புழு தாக்குதலால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மேற்கண்ட முறைகளை பயன்படுத்தி பயனடையுமாறு கலெக்டர் அ.ஞானசேகரன் கேட்டுக்கொண்டார்.

## மாவட்டத்தில் பலத்த மழை சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது

விழுப்புரம் மாவட்டத்தில் பலத்த மழை பெய்ததால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

<u>பலத்த மழை</u>

விழுப்புரம் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக கடும் வெயில் சுட்டெரித்து வருகிறது. இதனால் பொதுமக்கள் வெயிலின்

கொடுமையால் மிகவும் அவதிப்பட்டு வருகின்றனர். இருப்பினும் வெப்பச்சலனம் காரணமாக கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் மட்டும் அவ்வப்போது மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் விழுப்புரத்தில் நேற்று காலை முதல் மதியம் வரை வெயில் கொளுத்தியது. மாலை 3 மணிக்கு மேல் வானம் மப்பும், மந்தாரமுமாக காட்சியளித்தது. 5 மணியளவில் பலத்த காற்று வீச தொடங்கியது. சற்று நேரத்தில் சாரல் மழை பெய்ய தொடங்கியது. அடுத்த சில நிமிடங்களில் இடி– மின்னலுடன் பலத்த மழையாக பெய்ய ஆரம்பித்தது. இந்த மழை இடைவிடாமல் ½ மணி நேரத்திற்கும் மேலாக கொட்டி தீர்த்தது.

சாலைகளில் தண்ணீர் ஓடியது

இந்த மழையினால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் தண்ணீர் குளம்போல் தேங்கியது. திடீரென பெய்த இந்த மழையினால் பாதசாரிகள் மற்றும் இருசக்கர வாகன ஓட்டிகள் மழையில் நனைந்தனர். விழுப்புரம் நகராட்சி 8–வது வார்டுக்குட்பட்ட முத்தோப்பு மாரியம்மன் கோவில் தெருவில் சாக்கடை கால்வாய் நிரம்பி மழைநீருடன் கலந்து தெருவில் ஓடியதால் அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசியது. இதனால் பொதுமக்கள் கடும் அவதியடைந்தனர்.

இதேபோல் விக்கிரவாண்டி, உளுந்தூர்பேட்டை, எலவனாசூர்கோட்டை, திருவெண்ணெய்நல்லூர், செஞ்சி, மேல்மலையனூர், திண்டிவனம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் பரவலாக மழை பெய்தது. இந்த மழையினால் வெப்பம் தணிந்து இதமான குளிர்ந்த காற்று வீசியது. இதனால் கடும் வெயிலினால் அவதிப்பட்ட பொதுமக்கள் நேற்று பெய்த இந்த மழையினால் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

**பிளாஸ்டிக் கழிவு மூலம் புதிய எரிபொருள் திருச்சுழியில் அமெரிக்க மாணவர்கள் கண்டுபிடிப்பு**

அமெரிக்காவில் உள்ள 150 ஆண்டுகள் பழமையான கென்டகி பல்கலைக்கழகத்தின் பொறியியல் துறை மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் குழுவினர் புதிய தொழில்நுட்பங்களை கண்டுபிடித்து ஆராய்ச்சி செய்வதற்காக விருதுநகர் மாவட்டம், திருச்சுழியில் இயங்கி வரும் ஓடம் தொண்டு நிறுவன ஆராய்ச்சி மையத்துக்கு வருகை தந்தனர். தொடர்ந்து 40 நாட்கள் இதே பகுதியில் தங்கியிருந்து இங்கு கிடைக்கும் பொருட்கள் மூலமாக புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியுள்ளனர்.

அதன்படி பிளாஸ்டிக் கழிவுகளை சேகரித்து அதன் மூலம் ஒரு விதமான எரிபொருளை தயாரித்துள்ளனர். இந்த எரிபொருளை பரிசோதனை செய்து விவசாயத்துக்கு பயன்படும் மோட்டாரில் ஊற்றியபோது சாதாரணமாக 1 லிட்டர் டீசலுக்கு ஒரு மணி நேரம் ஓடும் மோட்டார் சுமார் 1¾ மணி நேரம் ஓடியது கண்டுபிடிக்கப்பட்டது. சீமைக்கருவேல மரத்தில் இருந்து கரிமூட்டம் தயாரிக்கும் போது அதில் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கரிக்கட்டையில் இருந்து 'மர வினிகர்' என்ற உப பொருள் எடுக்கப்பட்டது. இந்த எண்ணையை ரசாயன உரத்துக்குப் பதிலாக பூச்சிக்கொல்லிகளை ஒழிப்பதற்கு மருந்தாக பயன்படுத்தலாம் என்று மாணவர்கள் கண்டுபிடித்தனர். மாணவர்கள் குழுவினர் தங்களது கண்டுபிடிப்புகளை பொதுமக்களுக்கு செயல்விளக்கமாக செய்து காண்பித்தனர்.மெரிக்க கென்டகி பல்கலைக்கழக பேராசிரியர் ஜெப்ரீஸி கூறுகையில், தமிழக அரசு பிளாஸ்டிக் கழிவுகளையும், சீமைக்கருவேல மரங்களையும் ஒழிப்பதற்கு பல்வேறு முயற்சிகளை செய்து வருகிறது. கிராமப்புறத்தில் சாதாரணமாக, எளிமையாக கிடைக்கும் இவற்றைக் கொண்டு புதிய

தொழில்நுட்ப உத்திகளை பயன்படுத்தி இந்த கண்டுபிடிப்புகளை உருவாக்கியுள்ளதாக தெரிவித்தார். அப்போது ஓடம் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த ஜெயராஜ், இளங்கோ ஆகியோர் உடனிருந்தனர்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் 92 அடியை தாண்டியது**

மேட்டூர், ஜூலை 24–கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழையின் காரணமாக அங்குள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து 29 ஆயிரம் கன அடி தண்ணீர் காவிரி ஆற்றில் திறந்துவிடப்பட்டது. இதனால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.மேட்டூர் அணையின் நீர்மட்டமும் வேகமாக உயர்ந்தது. இந்த நிலையில் தற்போது கர்நாடகாவில் மழையின் தீவிரம் குறைந்து விட்டதால் அணைகளில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீரின் அளவும் குறைக்கப்பட்டது. நேற்று முன்தினம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் 22 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இது நேற்று காலை 20 ஆயிரம் கன அடியாகவும் மாலையில் 18 ஆயிரம் கன அடியாகவும் குறைந்தது. இன்று காலை ஒகேனக்கல்லில் 15 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

நீர்வரத்து குறைந்ததால் ஒகேனக்கல் அருவியில் குளிக்க விதிக்கப்பட்டிருந்த தடை நேற்று பிற்பகல் முதல் நீக்கப்பட்டது. இதையடுத்து சுற்றுலா பயணிகள் அருவியில் குளித்து மகிழ்ந்தனர்.

கர்நாடக அணைகளில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் நேராக மேட்டூர் அணைக்கு வந்ததால் அணையின் நீர்மட்டம் ‘மளமள’வென உயர்ந்தது. ஆனால் தற்போது நீர்வரத்து குறையத் தொடங்கி விட்டது. நேற்று காலை 21 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இன்று காலை இது 15 ஆயிரத்து 97 கன அடியாக குறைந்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 2 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. நீர் திறப்பைவிட நீரின் வரத்து அதிகமாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் 91.10 அடியில் இருந்து 92.40 அடியாக உயர்ந்து உள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**90 அடியைத் தாண்டியது நீர்மட்டம்: மேட்டூர் அணை திறப்பு எப்போது?**



கோப்பு படம்

மேட்டூர் அணை நீர்மட்டம் 90 அடிக்கு மேல் உள்ளதாலும், நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதாலும் டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடியை மேற்கொள்ள வசதி யாக வரும் ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் அணையைத் திறக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

மேட்டூர் அணையில் போதிய நீர்இருப்பு இல்லாததால் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இந்த ஆண்டும் குறுவை சாகுபடிக்கு ஜூன் மாதத்தில் தண்ணீர் திறக் கப்படவில்லை. இந்நிலையில், கர்நாடகத்தில் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழை காரணமாக அங்குள்ள அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. இதனால் கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளில் இருந்து திறக்கப்படும் உபரிநீரின் அளவும் அதிகரித்துள்ளது.

ஜூலை 20-ம் தேதி நிலவரப்படி கர்நாடக அணைகளின் மொத்த நீர் இருப்பு 83.5 டி.எம்.சி.யாக உள்ளது. கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து 9,035 கன அடியும், கபினியில் இருந்து 20,000 கன அடியும் தமிழகத்துக்குத் திறக்கப்படுகிறது.

மேட்டூர் அணையில் நேற்று மாலை நிலவரப்படி நீர்மட்டம் 91.41 அடியாகவும், அணைக்கு நீர்வரத்து நேற்று காலை நிலவரப்படி 25,591 கன அடியாகவும் இருந்தது. குடிநீருக்காக 1,178 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. கடந்த 3 நாட்களில் அணையின் நீர்மட்டம் 4 அடிக்கு உயர்ந்திருக்கிறது. ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படும். இந்தாண்டு நீர்இருப்பு போதிய அளவில் இல்லாததால், சம்பா சாகுபடிக்கு அணையில் இருந்து நீர் திறக்கப்படவில்லை.

இந்நிலையில், டெல்டா மாவட் டங்களில் குறுவை சாகுபடி முழுமையாக மேற்கொள்ளப்படாத நிலையில், ஒருபோக சம்பா சாகு படியை

மேற்கொள்ள மேட்டூர் அணை திறப்பு குறித்த அறிவிப்பை டெல்டா விவசாயிகள் எதிர்நோக்கி யுள்ளனர்.

இதுகுறித்து விவசாய சங்கங் களின் கூட்டமைப்பு பொதுச் செய லாளர் ஆறுபாதி கல்யாணம் கூறியதாவது: சம்பா பருவத்தைப் பொறுத்த வரை 145-150 நாட்கள் வயது டைய நெல் ரகங்கள் ஏற்றவை. இந்த பருவத்தில் நெல் நடவுப் பணிகளை செப்டம்பர் இறுதிக்குள் முடித்தால்தான் அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்குப் பருவ மழை மூலமாக வரும் வெள்ளத்தால் பயிர்கள் பாதிக்காமல் இருக்கும். வெள்ளம் பாதிக்காத மேட்டுப்பாங்கான பகுதிகளில் வேண்டுமானால் 125-135 நாட்கள் வயதுடைய ரகங்களை பயிரிடலாம். இதற்கு வசதியாக மேட்டூர் அணையை ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் திறந்தால் பயனுள்ளதாக இருக்கும்.

ஆறுகள், வாய்க்கால்கள் தூர்வாரப்படா ததால் வயல்களை தண்ணீர் சென்று சேருவதில் பெரும் சிரமம் இருக்கிறது. இதனால் தண்ணீர் திறப்பதற்கு முன்பாக வருவாய் கோட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் பொதுப்பணி, வேளாண்மை, வருவாய்த் துறை களின் அதிகாரிகள் விவசாய சங்கப் பிரதிநிதிகள் கொண்ட கூட்டத்தைக் கூட்டி இதற்கான திட்டமிடுதல்களை மேற்கொள்ள வேண்டும். மேலும், சம்பா சாகுபடிக்கு தேவையான விதைகள், உரங்கள் மற்றும் இடுபொருட்களை தட்டுப்பாடில்லாமல் விநியோகிக்க அரசு முன்னதாகவே திட்டமிட வேண்டும் என்றார்.

**விஜயவாடாவில் மீன் மழை**

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தில் நேற்று பரவலாக மழை பெய்தது. இதில் விஜயவாடா பகுதியில் சில இடங்களில் மீன் மழை பெய்தது.

நேற்று முன் தினம் இரவும் மீன் மழை பெய்துள்ளது. நேற்று காலையில் இதனை பார்த்த விஜயவாடாவாசிகள் ஆச்சரியத்துக்குள்ளாயினர். பிறகு அவர்கள் அந்த மீன்களை பிடித்து சென்றனர்.

ஏற்கெனவே கிருஷ்ணா மாவட்டம் கொத்தபல்லி பகுதியில் கடந்த மாதம் மீன் மழை பொழிந்தது.

இந்த மீன்கள், விவசாய நிலத்திலும், சாலைகளிலும் கொட்டி கிடந்ததை பார்த்த கிராம மக்கள் மிகவும் ஆச்சரியப்பட்டனர்.

தினகரன்

**பசுமையில் இந்தியா 3வது இடம்**




புதுடெல்லி: அதிக அளவில் பசுமை கட்டிடங்களை கட்டுவதில் இந்தியாவுக்கு உலக அளவில் மூன்றாவது இடம் கிடைத்துள்ளது அமெரிக்காவில் உள்ள பசுமை கவுன்சில் இது தொடர்பாக வெளியிட்ட சர்வேயில், முதலிடத்தை கனடா, அடுத்த இடத்தை சீனா பிடித்துள்ளன. இந்தியாவில் 190 கோடி சதுர மீட்டர் பரப்புக்கு தோட்டங்களுடன்

கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. பசுமை திட்டங்களுக்கு முக்கியத்துவம் தருகிறது இந்தியா என்று கவுன்சில் கூறியுள்ளது.

**வெங்காய விலை 70% உயர்வு**




புதுடெல்லி: ஆசியாவிலேயே மிகப் பெரிய வெங்காய சந்தையாக, மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள லசால்கான் கருதப்படுகிறது. இங்கு, கடந்த மாதத்துடன் ஒப்பிடும்போது, வெங்காயத்தின் விலை 70% அளவுக்கு அதிரடியாக உயர்ந்துள்ளது. மொத்த விலையில், கடந்த மாதம் கிலோவுக்கு ரூ.15 என விற்கப்பட்ட வெங்காயம், தற்போது ரூ.25.50க்கு விற்பனையாகிறது. இதனை சில்லரை வியாபாரிகள், கிலோவுக்கு ரூ.35-40 என்ற விலையில் விற்பனை செய்கின்றனர். மகாராஷ்டிராவில் மட்டும் இல்லாமல், நாட்டின் பல்வேறு மார்க்கெட்டுகளிலும் வெங்காயத்தின் விலை கணிசமாக உயர்ந்துள்ளது. இதேபோன்று, குளிர் காலத்தில் விளைந்த வெங்காயம், மூட்டை மூட்டையாக சேமித்து வைக்கப்பட்டு இருந்தன. இந்நிலையில், திடீரென பெய்த மழையால், அவற்றில் பெரும்பாலானவை அழுகி விட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**காஞ்சிபுரத்தில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி**

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் மாவட்டத்தில் நேற்று காலை முதல் மாலை வரை வெயில் கொளுத்தியது. மாலை 6 மணிக்கு திடீரென மழை

பெய்தது. இந்த மழை 7 மணி வரை நீடித்தது. காஞ்சிபுரத்தில் லேசான மழையும், செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம், உத்திரமேரூரில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. காஞ்சிபுரத்தில் காந்தி ரோடு, காமராஜர் வீதி, கலெக்டர் அலுவலகம் செல்லும் சாலை போன்ற பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. செங்கல்பட்டு ஜிஎஸ்டி ரோடு, சென்னை, காஞ்சிபுரம் செல்லும் சாலைகளில் மழைநீருடன் கழிவுநீர் கலந்து ஓடியது. கல்பாக்கம், மாமல்லபுரம், உத்திரமேரூர், திருப்போரூர், கேளம்பாக்கம், கூடுவாஞ்சேரி, மதுராந்தகம், அச்சிறுப்பாக்கம் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இந்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் மாவட்டத்தில் நேற்று காலை முதல் மாலை வரை வெயில் கொளுத்தியது. மாலை 6 மணிக்கு திடீரென மழை பெய்தது. இந்த மழை 7 மணி வரை நீடித்தது. காஞ்சிபுரத்தில் லேசான மழையும், செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம், உத்திரமேரூரில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. காஞ்சிபுரத்தில் காந்தி ரோடு, காமராஜர் வீதி, கலெக்டர் அலுவலகம் செல்லும் சாலை போன்ற பகுதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. செங்கல்பட்டு ஜிஎஸ்டி ரோடு, சென்னை, காஞ்சிபுரம் செல்லும் சாலைகளில் மழைநீருடன் கழிவுநீர் கலந்து ஓடியது. கல்பாக்கம், மாமல்லபுரம், உத்திரமேரூர், திருப்போரூர், கேளம்பாக்கம், கூடுவாஞ்சேரி, மதுராந்தகம், அச்சிறுப்பாக்கம் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இந்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

மதுரை, : கால்நடை வளர்ப்போர் ஆடு, மாடுகளுக்கு அரிசி மற்றும் அரிசி சோறு போன்ற மாவுபொருள்களை உணவாக கொடுப்பதால் வயிற்றில் அமிலச்சத்து அதிகரித்து வயிறு உப்புசம் நோய் ஏற்படுகிறது. இதனால் பெரும்பாலான கால்நடைகள் இறக்கின்றன. மாவுச்சத்து நிறைந்த

உணவுப்பொருள்கள் கொடுப்பதை தவிர்த்து, பசுந்தீவனங்களை அதிகளவில் கொடுக்க வேண்டும் என்கிறார் கால்நடை மருத்துவர் சுரேஷ். அவர் மேலும் கூறுகையில்,''கால்நடை வளர்ப்போர் வீட்டில் சமைத்துவிட்டு மீதமாகும் உணவுகளான அரிசி, அரிசி சோறு, இட்லி, பொங்கல், போன்ற மாவுச்சத்து நிறைந்த பொருள்களையும், வாழைப்பழம், பலாப்பழத்தோல், போன்ற சர்க்கரைச்சத்து நிறைந்தவைகளையும் ஆடு, மாடுகளுக்கு உணவாக கொடுக்கிறார்கள்.

இவற்றை சாப்பிடுவதால் கால்நடைகளுக்கு வயிற்றில் அமிலச்சத்து அதிகரித்து வயிறு உப்புசம் நோய் ஏற்படுகிறது. கால்நடைகள் சோர்வடைந்து சாணம் இடுவது குறைவது, நாக்கு வறண்டு தாகம் எடுத்தல், நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு பார்வை குறைபாடு ஏற்படுதல் போன்றவை இந்நோயின் அறிகுறிகளாகும். இதனால் கால்நடைகளும் இறக்கவும் நேரிடுகின்றன. நோயின் அறிகுறிகள் தென்பட்டால் உடனே கால்நடைகளுக்கு தண்ணீரில் 250 கிராம் அளவு சோடா மாவை கலந்து கொடுத்து பின்பு கால்நடை மருத்துவரை அணுக வேண்டும். அமிலசத்து உணவு பொருட்களை தவிர்த்து கால்நடைகளுக்கு பசுந்தீவனங்களை அதிகளவில் கொடுக்க வேண்டும்' என்றார்.

**சின்னமனூரில் முதல்போக நெல் நடவு தீவிரம்**

சின்னமனூர், : சின்னமனூர் பகுதியில் முதல் போகத்தில் 500 ஏக்கர் நடவு பாக்கியிருப்பதால் 10 நாட்களில் முழுமையாக நிறைவடையும் என விவசாயிகள் தெரிவித்தனர்.சின்னமனூர் வேம்படிகளம், கருங்கட்டான்குளம், முத்துலாபுரம் பிரிவு, மார்க்கயன்கோட்டை, குச்சனூர், சீலையம்பட்டி என சுமார் 4 ஆயிரம் ஏக்கரில் வருடத்தில் இருபோகம் நெல் சாகுபடி விவசாயம் நடந்து வருகிறது. முல்லைபெரியாற்றின் பாசனமே பிரதானமாக இருந்து வருவதால்

விவசாயிகள் தொய்வின்றி தொடராக விளைவித்து வருகின்றனர். கடந்த ஜூன் 2ம் தேதி திறக்கப்பட்ட தண்ணீரால் 25 நாடகளில் நாற்றை வளர்த்து மாத இறுதியில் நடவுப்பணிகள் துவங்கி வேகமாக நடந்து வருகிறது. இந்நிலையில் பாசன பற்றாக்குறை ஏற்படாதவாறு பிரத்யேகமாக உருவாக்கப்பட்டிருக்கும் கருங்கட்டான்குளம், உடையகுளம், செங்குளங்களில் தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கருங்கட்டான்குளம் பகுதியில் மட்டும் 500 ஏக்கர் நடவு பணி பாக்கி இருக்கிறது. கருங்கட்டான்குளம் தாமதமாக நிறைந்துள்ளதால் வயல்வெளிகளுக்கு தண்ணீர் தாமதமாக வந்து சேர்ந்ததால் நாற்றாங்கால் பணியும் தாமதமாக பாவியதால் அப்பகுதியில் நடவிற்கான பணிகள் தற்போது துவங்கி தீவிரமாக நடந்து வருகிறது. இந்த நடவு பணிகள் இன்னும் 10 நாட்களில் முழுமையாக நிறைவு பெற்றுவிடும் என விவசாயிகள் தெரிவித்தனர்.